தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

ஆனந்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை - 6.

மலர் 5 | சென்னை | 1-11-58 | சனிக்கிழமை | இதழ் 20

கம்யூனிஸ்டுகளுக்கு :

கேளுங்கள்; பதில் கிடைக்கும்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது வசை மொழிகளை 'வாரியிறைத்துக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள், கழிந்த இரு கிழமைகளில் ஏராளமான சொல்லீட்டிகளை வீசியிருக்கிறார்கள். பம்பாயில் பெரியார் பிறந்த தின விழாவில் பேசிய கம்யூனிஸ்ட் மேயர் எஸ். எஸ். மிராஜ்கார் என்பவர்-டாங்கேயுடன் சேர்ந்து தொழிலாளர் துரோகியென்று பட்டம் பெற்றவர், திராவிடநாடு பிரிவினைத் திட்டம் தேச ஐக்கியத்தைச் சிதைத்துவிடும் என்று பேசியிருக்கிறார். கம்யூனிஸ்ட் கட்சியின் துணைச் செயலாளர்களில் ஒருவரான ரணதிவே-திராவிடஸ்தான் அமெரிக்க ஸ்தானாகிவிடும் என்று அடி வயிறு வலிக்கக் கூவியிருக்கிறார் தஞ்சைப் பொதுக்கூட்டத்தில்! இந்தப் பெருந் தலைவர்களே துணிந்துவிட்ட பிறகு, தமிழ்நாட்டின் தனிப் பெரும் தலைவர் ஜீவானந்தம் அவர்களால் சும்மா இருக்கமுடியுமா - அவரும் கூட சென்னைப் பொதுக்கூட்டத்தில் முன்னேற்றக் கழகத்திற்கு கேள்விமாரிகளை அனுப்பியிருக்கிறார். ஓராண்டுக்கு மேலாகவேதான் போகுமிடமெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும் மாசேதுங்கின் மணி மொழியைச் சொல்லிவிட்டு, அறிஞர் அண்ணா அவர்களின்பக்கம் தன் உடம்பைத் திருப்பி, வாயைத் திறந்து சிகாகோ நிருபர் பேட்டி கண்ட செய்தியைப் பிடித்துக் கொண்டார்! ஜீவானந்தமும்-ராமமூர்த்தியும் அந்த அமெரிக்கப் பத்திரிகை நிருபரின் கண்களுக்குத் தெரியவில்லையாம். அதனால்தான் அண்ணாவிடம் போய்விட்டாராம்! வெளி நாடுகளிலேயிருந்து வருபவர்கள் எல்லாம் அண்ணாவைப் போய்ப் பார்க்கிறார்களே என்ற உள்ளத்து எரிச்சலால்தான் அப்படிப் பேசினார் போலும்! அந்தச் செய்தியை 'நம்நாடு' இதழில் வெளியிட்டது ஏன் என்று கேட்கும் இவர்தான் 'ஜனசக்தி'யிலும் வெளியிட்டிருந்தார். அறிஞர் அண்ணா அவர்களை அமெரிக்க நிருபர்மட்டுமா சந்தித்திருக்கிறார்? முன்னதாக இத்தாலியக் கம்யூனிஸ்டுகட்சி பத்திரிகையின் டில்லி நிருபர்கூடத்தான் சந்தித்துப் பேசினார். சிகாகோ நிருபர்தான் ஜீவானந்தம்- ராமமூர்த்தியிடம் வரவில்லை. வேறு யார்தான் வந்தார்கள்? வெளிநாட்டிலேயிருந்து வந்த குருசேவும் புல்கானினும்-டிட்டோவும் சௌன்லாயும் ஹோசிமின்னும் அட்லியும் இந்த இருவரையும் பார்த்துப் பேசி அரசியல் சிக்கல்களுக்கும் உலகத்தின் விமோசனத்திற்கும் ஆய்வுரைகள் பெற்றுக்கொண்டார்களா? பதில் என்ன?

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் தொழிலாளர் நலனுக்குப் பாடுபடவில்லை. கம்யூனிஸ்டுகளின் பிறப்பு அதற்காகவேதான் என்றும் ஒரு கேள்வியைக் கேட்டாராம். தொழிலாளர்-பாட்டாளிகள்-என்று பேசியே விளம்பரந் தேடிக் கொண்ட கம்யூனிஸ்டுகளைப்போல, கழகத்தவர் உழைக்கும் வர்க்கத்தினரை என்றாவது காட்டிக் கொடுத்ததுண்டா. அல்லது அவர்களிடம் உண்டியல் குலுக்கி, மில் வாயிற்படியிலேயே மடியேந்தி நிற்கும் கம்யூனிஸ்டுகளைப்போல வலை வீசிப் பிடித்த வழக்கமாவது உண்டா? கழகம் பாட்டாளி இனத்தவரை தன் ஏற்றத்திற்கு ஏணியாக்கிக் கொள்ளவில்லை. அவர்கள் மீது ஏறி மிதித்துக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள் இதனை இன்னும் உணராமலிருப்பது ஏன்? தொழிற் சங்கத்துத் தூண்கள் எனக் கூறிக் கொள்ளும் கம்யூனிஸ்டுகள் சதி வழக்குகளிலே சிக்கிக்கொண்டது ஏன்? பாட்டாளிகளின் தோழன் ஜீவா, அவர்களை நாச வேலைகளுக்குத் தூண்டியதால்தானே சென்னை மாகாணத்தை விட்டு வெளியேற வேண்டுமென்று 1940 ஜனவரி 11-ம்தேதியன்று சர்க்கார் கட்டளையிட்டது? நம்பியதொழிலாளர்களைக்கைவிட்டு காரைக்கால் மண்ணுக்கு ஓடியதேன்? அங்கிருந்தும் பம்பாய்க்கு விரட்டப்பட்டது ஏன்? மார்க்சும், ஏங்கெல்சும் சொன்னபடி தொழிலாளி வர்க்கத்திற்கு ஒழுங்காக வேலை செய்திருந்தால் கள்வர்களைப்போல் காடுகளில் ஒளிந்து அலைந்திருக்கமுடியுமா? அறிஞர் அண்ணாவும் நாவலர் நெடுஞ்செழியனும் 'வாரண்ட்' வருவது தெரிந்தவுடன் தலைமறைவானதுண்டா? பின்வரும் ருசிகரமான சேதிகளைக் கம்யூனிஸ்டுகள் காணட்டும்-''மதுரைச் சதி வழக்கு காரணமாக ஜீவானந்தம் மீது 'வாரண்ட்' பிறப்பிக்கப்பட்டது. இந்த அடக்குமுறை பாணத்திற்குத் தப்பி அவர் தலைமறைவானார். இலங்கைக்குப் பயணமானார். 1949-ல் திரும்பியவுடன் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் வைக்கப்பட்டார்.'' இப்படிச் சொல்லியிருப்பவர் யார் தெரியுமா 'ஜனசக்தி' உதவி ஆசிரியர், தினத்தந்தியின் மாஜி உதவி ஆசிரியர் தோழர் மாஜினி-இந்தப் பெயர்கூட ஆதித்தன் அன்பளிப்பு. துப்பாக்கி முன்னால் மார்பு காட்டியவர்கள் கம்யூனிஸ்டுகள் என்றால் ஜீவானந்தங்களும், ராமமூர்த்திகளும், கல்யாணசுந்தரங்களும், கந்தசாமிகளும் தலைமறைவாகிவிடுவதற்கு காரல்மார்க்சும் ஏங்கல்சும் ஏதாவது எழுதி வைத்திருக்கிறார்களா? எங்கே? எங்கே? எடுத்துக் கூறுங்கள்?

1952 பொதுத் தேர்தலின்போது கழகம் கம்யூனிஸ்டுகளுக்கு நிபந்தனை விதித்து-ஒப்பந்தத்தில்கையெழுத்திட்டுப் பிரிவினைக் கொள்கையை ஏற்றுக்கொண்டால்-கழகத்தின் உதவி கிடைக்கும் என்றோம்: காஞ்சியில் ஏ. கே. கோபாலனைப் பாராட்டிப் பேச அறிஞர் அண்ணாவை அழைத்தார்-1957 தேர்தலில் அவரோடுபோட்டியிட்டு ஜாமீனிழந்த தோழர் பார்த்தசாரதி! பிரிவினையைப்பற்றி அண்ணா விளக்கம் தந்தார் எவரும் மறுக்கவில்லை. மைதானத்திற்கு வரமுடியாத கம்யூனிஸ்டுகள் ஒரு மாடியில் கூடினார்கள் அன்று! ஐம்பெரும் தலைவர்களை ஏமாற்றிவிட்டேன் என்ற வகையில் பேசிய ஜீவானந்தம், அறிஞர் அண்ணாவை எட்டு முறை சந்தித்த பிறகு ''நான் விடப் போவதில்லை, எத்தனை முறை வேண்டுமானாலும் வந்து வந்து போவேன் - கழுத்தைப் பிடித்துத் தள்ளி வர வேண்டாம் என்றாலும் வரத்தான்செய்வேன். —கழகம்—கம்யூனிஸ்ட் இணைப்பில் ஒரு வெற்றி கண்டாக

— 3-ம் பக்கம் —

பருவம்

வெளியே இலையுதிர் காலம் ஆரம்பமாகி விட்டது. வறுமையில் உழல்வோனின் விலா எலும்புகள்போல, சிறைக்கம்பிகளின் நிழல் தரையில் கோலமாக விழுந்து கிடக்கிறது.

ஞானி, மோனத்தவத்தில் நெஞ்சினுள் உருண்டுகொண்டிருந்தான். தாடி வளர்ந்துவிட்டது. கண்வளையத்தில் இருள்தொட்டுப் பூசியாயிற்று. சருமமெல்லாம் தளர்வின் சுளிவுகள். மேனியின் பூனைமயிர்கள் செம்பட்டை நிறமேறிப் போய்விட்டன.

காலம், பருவங்களை உதிர்த்துக்கொண்டு வெறும் இருள்மட்டுமாக ஊர்ந்தது. வாழ்வு, காராக்கிரக சுவர்களிடையே, நாட்களின் எண்ணிக்கையில் அடங்கிக் கிடந்தது!

சாவு ஒன்று மட்டும், செய்துவிட்ட வேலையின் கூலியாக பாக்கியிருக்கிறது.

வெளியே இலையுதிர் காலம்.

ஞானி விழித்துக்கொண்டான். வெள்ளைத் திரைகட்டி மறைத்ததுபோல ஒருகணம் பார்வை தடுமாறியது. கண்ணைக் கசக்கி, இமைகளை வெட்டிப் பார்த்தபோது எல்லாம் தெளிவாயிற்று.

சிறைக்கூடம். நேற்றிரவு சட்டியில் வைத்த உணவின் மிச்சத்தை, பருக்கை பருக்கையாக இழுத்துக்கொண்டு எறும்புகள் பட்டாள ஊர்வலம் போகின்றன.

"எங்கே இந்தப் பயணம்?"

"வெளியுலகிற்கு!"

வினவும் விடையும் பிறக்கும் ஒரே நெஞ்சம்!

"அந்த வெளியுலகு இனி இல்லை!"

"கர்மத்தின் பயன்!"

"என்ன கர்மம்?"

"அதுதான் செயல்! செய்துவிட்ட பயங்கரச் செயல்!"

"என்ன பயங்கரம்? கொன்றேன். கடினமாகக் குத்திக் கொலை செய்தேன். நெஞ்சு, நிச்சலமாகத்தான் செயல்புரிந்தது. இன்றும், செயலின் பலனை அனுபவிக்க சலனமற்று நிமிர்ந்துதான் நிற்கிறது."

"பொய். ஏன் மறைக்கிறாய்?"

"மறைக்கவில்லையே."

"உம்.....அத்தனை மரத்துப்போன நெஞ்சம் கொண்டவன் எப்படிக் காதலிக்க முடிந்தது?"

"காதலித்தேன். காதல் விபரீதமாகியபோது, காதலித்தவளையே கொன்றேன். ஒருவகையில் நெஞ்சின் பலவீனந்தான்."

"அப்படி வா வழிக்கு. சாவதற்குப் பயந்தானே?"

"பயந்தான். அதனால்தான் உலகைக் காண அஞ்சி கண்ணை மூடிக் கடத்துகிறேன்."

நெஞ்சு அடங்கிற்று.

வெளியிலிருந்து குளிர்காற்று வீசியது. கல்மேடையில் வைக்கோல் படுக்கை, ரிஷியின் குலைந்த கேசம்போல நாதியற்றுக் கிடந்தது.

"ஞானியே!"

"யார் அழைத்தது? குரல் எங்கிருந்து வருகிறது? சுவர்களிலிருந்தா?"

"இல்லையே!"

"அதற்கப்பால் எங்கிருந்து குரல் வந்தது? இலைகொழிந்த மரங்களின் சூன்யத்திலிருந்தா?"

"இல்லையே."

"பின் எங்கிருந்து வந்தது, இந்த அழைப்பு? பனிபடர்ந்த வானத்தின் மறைவிலிருந்தா?

"........"

"ஞானியே! என்ன மிரட்சி? நான்தான் பேசுகிறேன். புனிதை. 'என் புனிதையே' என்று அழைத்துக் கொஞ்சுவாயே - அதே புனிதைதான், அழைத்தேன்."

"புனிதையா? உன்னை நான்..."

"கொன்றுவிட்டேன் என்று தானே எண்ணுகிறாய்? அதனால் என்ன, நான் இங்கேதான் இருக்கிறேன்."

"எங்கே?"

"கடந்த காலத்தின் நினைவில்!"

"புனிதை! என்னை மன்னித்துவிடு புனிதை. நான்... நான்..."

"சிரிப்பு!"

"சிரிக்காதே புனிதை! உன்னைக் கொன்ற அன்றே நானும் செத்தேன். இந்தச் சிறையும், கட்டுக்காவலும், என் உடலைப் பிடித்து வைத்திருப்பதாகப் பெருமைப்படுகின்றன. இனி என் பிணத்தைத் தான் கழுவேற்றப் போகிறார்கள் என்று அவர்களுக்குத் தெரியவே தெரியாது. அன்று நான் கடின சித்தம் கொண்டிருந்தேன் என்று என் மேல் கோபமா? நான் என்ன செய்ய? நீ, காதலை அலட்சியம் செய்ததை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை."

சிரிப்பு! சிரிப்பு!

"சிரித்துக் கேலி செய்கிறாயா, புனிதை? நீ காதலைப் பங்கிட நினைத்தாய் என்று, நான் உன் மேல் குற்றம் சாட்டுகிறேன். நீ என்னை ஏமாற்றிவிட்டாய். வஞ்சிக்க நினைத்தாய். என் உடன் பிறந்தவனால் என்ன? காதலைப் பற்றி உனக்கு ஒன்றுமே தெரியவில்லை. அதிலும் நீ சிறு குழந்தையாக இருந்தாய். வேடிக்கை. குரங்கு, புண்ணைக் கிழித்து ரசிப்பது போன்ற அந்த வேடிக்கையை என்னால் தாங்க முடியவில்லை. எனது கத்தி, எரியும் வஞ்சத்தை அணைத்துவிட்டது. நீ செத்தபின்பு, உன்னிடமிருந்து பிரிந்த களங்கமற்ற ஆவியை நான் காதலித்தேன். இதோ, அந்தக் காதலால் நான்; ஊன் இன்றி, உறக்கமின்றி, செயலின்றி, மெலிந்து மெலிந்து உன்னைத் தொடுவதற்காக எட்டி எட்டி வருகிறேன்."

சிரிப்பு! சிரிப்பு! சிரிப்பு!

வெளியே வசந்தம் ஆரம்பமாகியிருந்தது. சிறைச்சுவர்கள் மோனத்தைச் சிறை வைத்திருந்தன. ஞானி, கண்களை நெஞ்சினுள் வைத்து உறங்கிக்கொண்டிருந்தான்.

புனிதை வந்தாள்.

"ஞானியே!"

"...... ....."

"ஞானியே! உறக்கமா, சிந்தனையா?"

"புனிதையா?"

"உம்!"

"இனி எத்தனை காலம், புனிதை?"

"எத்தனையோ காலம்."

"அவ்வளவு பெரிய தண்டனையா? நான் அப்படி என்ன செய்தேன்?"

"நினைத்துப் பாரேன்!"

"நினைக்க நேரமில்லை. பாப மன்னிப்பு வேண்டுவதுபோல, உன்னிடமே சொல்கிறேன். சரியா?"

"உம்."

"கோடைக் காலத்திலே ஒரு நாள்; இலையில் நிறைந்த சோற்றுக்குவியல்போல, நீலவானத்தில்மேகங்கள் ஊசலாடிய பகற்பொழுதில், நானும், தம்பி வசுவும் உன்னை எங்கள் படகில் ஏற்றிக்கொண்டு, ஆற்றின் மறுகரையிலுள்ள உன் வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்த்தோம். ஆற்றின்சம அளவில் தெளிந்தநீர் ஓடிக்கொண்டிருந்தது. அந்தத் தெளிவை, உன் விழி நீலத்தில் கண்டு மெய்மறந்து துழாவிக் கொண்டிருந்தேன்..... அதுதான் நான் உன்னை அறிந்த முதல்

— 11-ம் பக்கம் —



> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

தென்றல்

மலர் 5 ‖ 1—11—58 ‖ இதழ் 20

எதிர்க்கட்சி தேவையாம்!

'நாட்டில் சரியான எதிர்க்கட்சி இல்லை!'

'நல்ல எதிர்க்கட்சி இருந்தால்தான் முறையாக செயல்பட முடியும்!'

'காங்கிரசுக்கு எதிராக எந்த உருப்படியான எதிர்க்கட்சியும் இல்லை. அதனால்தான் நல்ல எதிர்க்கட்சி ஒன்று அத்தியாவசியமாகிறது!'

அதிகாரத்திலிருக்கும் காங்கிரஸ் கட்சியினரிலிருந்து, அரசியல் துறவு பூண்டுவிட்டவர் என்று கருதப்படுகிற ஜெயப்பிரகாஷ் நாராயணன் வரை நாட்டுக்கு நல்ல எதிர்க்கட்சி ஒன்று தேவை என்று வலியுறுத்தி வருகிறார்கள். அண்மையில், நமது சென்னை மாநில அமைச்சர் பக்தவத்சலம் அவர்களும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார்கள்.

ஆளும் கட்சி செய்யும் தவறுகளை எடுத்துக்காட்டி, அது முறையான ஜனநாயக வழிகளில் செயல்படத் தூண்டும் பொறுப்பு எதிர்க்கட்சிகளுக்கு உண்டு. எதிர்க்கட்சியின் வளர்ச்சி ஜனநாயக வளர்ச்சியாக மேல்நாடுகளில் கருதப்படுகிறது. அதனாலேதான் அங்கிருந்து வருகிற குரல்கள் ஒரே ஓசை உடையவையாக உலகுக்குத் தெரிகின்றன. அரசாங்கம் ஆற்றுகிற எந்தப் பணியிலும், நிறைவேற்றுகிற எந்தத் தீர்மானத்திலும், உருவாக்கும் எந்தத் திட்டத்திலும் எதிர்க்கட்சியினரின் கருத்துக்கு அங்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

ஆனால் அதே நேரத்தில், இங்கே எதிர்க்கட்சியினர் ஆளும் கட்சியினரால் எவ்வாறு மதிக்கப்படுகின்றனர் என்பது எல்லோருக்கும் தெரியும்.

எதிர்க்கட்சியினரில் எவருக்கும் தனிப்பட்ட தகுதி, திறமைகள் இருப்பதாகக்கூட நம்முடைய ஆட்சியாளர் ஒப்புக்கொள்வதில்லை. தாங்கள் புனிதமான, குறைவற்ற அரசியல் வாதிகள்போலவும், தங்களுடைய மூளையில் உதிப்பவை மட்டுமே உலகை உய்விக்க உதவுபவை என்றும் முடிவு செய்துகொண்டு, எதிர்க்கட்சியினரை அலட்சியம் செய்வதில் அவர்களுக்கு ஈடாக உலகெங்கும் யாரும் கிடையாது.

எதிர்க்கட்சியினரை அலட்சியப்படுத்துவது மட்டுமல்லாமல், அவர்களுக்கு ஆட்சியாளர் தருகிற தொல்லைகளும் கணக்கிட முடியாதவை.

காரணமில்லாமலே கைது.

விசாரணையில்லாமலே சிறை.

அறிவிக்காமலே பறிமுதல்.

—இவை எதிர்க்கட்சியினரின் வாழ்வில் தினசரியும் வந்து போகும் நிகழ்ச்சிகள்.

அலட்சியமும் செய்யப்பட்டு, அடக்குமுறைக்கும் ஆளாக்கப்படுகிறார்கள் இந்த நாட்டு எதிர்க்கட்சியினர்.

இந்த 'சத்' காரியத்தைச் செய்து முடிக்கும் ஆளும் கட்சியினரோ, அடிக்கடி 'நல்ல எதிர்க்கட்சி தேவை; நல்ல எதிர்க்கட்சி தேவை' என்று சொல்ல மறப்பதில்லை.

நல்ல எதிர்க்கட்சி தேவை என்றால், இப்பொழுது இருக்கும் கட்சிகளில் எது நல்ல எதிர்க்கட்சி இல்லை, அல்லது ஒரு நல்ல எதிர்க்கட்சி எப்படி இருக்கவேண்டும் என்பதை ஆட்சிபீடத்தில் வீற்றிருக்கும் அவர்கள்தான் விளக்கிக் கூறவேண்டும்.

தென்னாட்டைப் பொறுத்தமட்டில், ஆளும் கட்சிக்குச் சரியான எதிர்க்கட்சியாக நாம் செயல்பட்டு வந்திருக்கிறோம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

சர்க்கார் சொல்லுகிறது, செய்கிறது என்பதற்காக மட்டுமே எதையும் கண்மூடித்தனமாக எதிர்த்துவிடாமல், ஆதரிக்கவேண்டியதை ஆதரித்து, எதிர்க்கவேண்டியதை எதிர்த்து முறையான ஜனநாயக எதிர்க்கட்சியாக நாம் வளர்ந்து வந்திருக்கிறோம். நம்மைப்போலவே அகில இந்திய ரீதியில் சில கட்சிகள் அங்கம் வகிக்காமலில்லை.

என்றாலும், இத்தனை எதிர்க்கட்சிகளையும் பார்த்துக்கொண்டு, அவற்றின் ஒவ்வொரு நடவடிக்கைகளையும் கிண்டல் செய்து அலட்சியப்படுத்திவிட்டு, அடிக்கடி அவர்கள்மீது அடக்குமுறை அம்புகளைப் பிரயோகித்துவிட்டு ஆட்சியாளர்கள் சொல்லுகிறார்கள், நல்ல எதிர்க்கட்சி தேவை என்று. இவர்களுடைய இந்தக் கூற்றில் என்ன நியாயம் இருக்கிறதோ நமக்குத் தெரியவில்லை.

இனியாவது எத்தகைய எதிர்க்கட்சி தேவை என்பதை, அல்லது தாங்கள் குறிப்பிடும் எதிர்க்கட்சிக்கு இருக்கவேண்டிய இலக்கணத்தை அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

வேண்டும்" என்று சொன்னாராம். அதன்படியே மாநில மாநாட்டிலும் மேடையில் வந்து உட்கார்ந்துகொண்டார்-பேச்சு வேகத்திலேயாவது 'ஒப்பந்தம் இல்லை ஓடி வாருங்கள்' என்று அண்ணா சொல்லமாட்டாரா என்று ஏங்கித் தவித்தார்! அவர்தான் வட சென்னைக் கூட்டத்தில் வம்பு பேசுகிறார்! 1957 பொதுத் தேர்தலில் பிரிவினைப் பேச்சை கழகம் மறந்துவிட்டதாம். ஏனைய கட்சிகளின் கடைசித்தரத் தோழர்களைப்போல் கம்யூனிஸ்ட் கட்சியின் புரட்சிக் கவி, இலக்கியச் சுடர்மணி, சமதர்மச் செம்மல், எதற்கும் அஞ்சாத அடலேறு, என்றெல்லாம் வர்ணிக்கப்படுகிற ஜீவானந்தமும் கேட்டிருக்கிறார். இவரைப் போன்றவர்கள் கழகத்தின் தேர்தல் அறிக்கையைப் படித்துப் பார்க்காமல் புரட்டுக்கள் பேசுவது புரட்சிக்கும் எழுச்சிக்கும் அழகல்ல! **"திராவிடத்தின் விடுதலை வேண்டி நிற்கும் கழகம் அரசியல் அமைப்பில் செய்யப்பட வேண்டிய முதல் மாற்றம், எந்த ஒரு மாநிலமும் எப்போது வேண்டுமானாலும் இந்திய யூனியனிலிருந்து பிரிந்து சென்று தனித்தியங்கும் உரிமையைப் பெறவும், திராவிடநாட்டின் அரசியல் சுதந்திரத்தை உருவாக்கவும், சமதர்மக் குடியரசைக் காணவும் தொடர்ந்து போராடக் கழகம் உறுதி பூண்டுள்ளது"**- இதுதான் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலுள்ள ஒரு பகுதி. தேர்தலின்போது இதைப்பற்றிப் பேசவில்லை எழுதவில்லை என்று ஜீவானந்தம் போன்றவர்கள்சொல்வதில் வியப்பில்லை. பாவம் அவர் நாகப்பட்டிணம் தொகுதியில் நாஞ்சில் மனோகரன் நாகூர் அனீபா-இவர்களிடத்தில் அகப்பட்டுக்கொண்டு-பெரும்பாடுபட்டுத்தான் மீண்டிருக்கிறார்-இவர் எப்படி கழகத்தின் தேர்தல் முரசொலியைக் கேட்டிருக்க முடியும்?

திராவிட நாட்டு விடுதலையை விரும்பி ஏற்றுக்கொள்ளாத ஜீவானந்தம் 'எல்லை எது'-தி. மு. க கிளைகள் திராவிடத்தில் உண்டா என்றெல்லாம் பழஞ்சோற்றைப் பிசைந்துப் புது பண்டம் காட்டியுள்ளார்! இவர் நம்பிக்கொண்டிருக்கும் இந்தியாவுக்கு அங்குலம் அங்குலமாக எல்லையை அளந்து 'ஜனசக்தி' அலுவலகத்துக்குள்ளே வைத்துக் கொண்டிருப்பவர்போல கேட்கிறார்-நான்கு இன மக்கள் விதியும் பகுதிகள் உள்ளடங்கிய திராவிடம், ஒருவருக்கொருவர் பிளவுகள் தோன்றா வகையில் சரியான வகையில் அமைக்கப்படுவதே திராவிடக் கூட்டரசாகும். நாவலர் அவர்கள் சொல்லியிருக்கும் அருமையான விளக்கங்களையெல்லாம் படித்துப் பார்த்துவிட்டு மேடையில் பொழிந்து தள்ளினால் குழப்பம் தெளியும்! கேரளப் பகுதியில் கழகம் கண்டிருப்போரெல்லாம்இங்கிருந்து சென்று குடியேறியவர்கள் அல்ல-பெங்களூரில் ஒரு பகுதி பெரியார் நகர்-அங்கே வாழும் தோழர்கள் எல்லாம் சென்னையிலிருந்து குடியேறியவர்கள் அல்ல. கன்னடநாட்டு மாநாட்டினைக் காட்டி-கேரள மாநிலத்துக் கழக அமைப்பினைக் காட்டித்தான் திராவிடத்தின் பகுதிகளிலும் திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் உண்டு. இனிமேலும் தொகை வளரும் என்று உறுதியாக நம்புகிறோம்! இந்தியாவுக்கும்- பாகிஸ்தானுக்கும் எல்லை, சரியில்லை. கிழக்குப் பாகிஸ்தான் எல்லைக்குச் சிறு பகுதியை நேரு கொடுத்தது தவறு என்று காமத் கண்டிக்கிறார். காரணம் காட்டுக என்று கட்டளையிடுகிறது உயர்நீதி மன்றம், பாராளு மன்றத்தின் உரிமை பெறுமல். எல்லையைக் கணக்கிட பண்டித நேருவுக்கு அதிகாரமில்லை என்று வழக்கு நடைபெறுகிறது. இந்த இரண்டு நாடுகளிலும் கட்சி நடத்திக்கொண்டிருக்கும் கம்யூனிஸ்டுகள்தான் எல்லைகள் எங்கே என்கிறார்கள்? 'திராவிட நாடு' கிடைக்காது என்று கண்டனக் குரல் விடுக்கின்ற கம்யூனிஸ்டுகள் எந்த எல்லைகளை நினைத்துக் கணக்கிடுகிறார்கள்? எல்லையில்லாத ஒரு பகுதியை விடுவிக்க முடியாதென்று பேசுகின்ற ராமமூர்த்திகள்,ரணதிவேக்கள்-ராஜுக்கள், எல்லையை மறந்து மற்ற காரணங்களையெல்லாம் ஒப்புக்கொண்டு-நாட்டுப் பிரிவினை சரியென்று சம்மதித்துக்கொள்ளத் தயாரா? பம்பாயிலே மிரளுகின்ற மிராஜ்காரும் டாங்கேயும் ஏற்றுக்கொள்வார்களா? தாயக விடுதலை என்பது இன விடுதலை, இழந்த வாழ்வை மீண்டும் திரும்பப் பெறுதலாகும்! மூல முழக்கத்திற்கு முரண்படுகின்ற கம்யூனிஸ்டுகள், எல்லை அளவு மிக மிகச் சாமான்யமானதென்பதை உணர வேண்டும்!

—கூடலரசன்

வெண்பாப் போட்டி-30.

ஈற்றடி :

நின்ற நிலையே நிலை.

முடிவு தேதி 15-11-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

கவியரங்கில்...

கண்ணதாசன்

சிவனடியான் சிவனடியான் என்கின் றாரே
சிவனுக்கோ இவனடியான்? இல்லை இல்லை!
இவனறியும் தமிழ்க்கவியின் பெருமை யெல்லாம்
சிவனறியான்! இவனவனின் அடியான் என்றே
எவனுரைப்பான்? பொய்! இவனின் திறமை ஆய்ந்தால்
இவனடியான் சிவனாவான்! தமிழ நல்லீர்
சிவனடியான் தமிழ்மொழியில் நிறைவு கண்ட
சீராரும் கற்புநெறி செப்புவான் இவ்வவையில்!

❁

தமிழ்க் கற்பு

பெரி. சிவனடியான்

"தென்றலினைத் தூதனுப்பித் தென்ன கத்தின்
  சிந்தையெலாம் திருடிவிட்ட கள்வா! "முல்லை"
நன்மலரின் நறுமணத்தால் நாட்டு மக்கள்
  நாடிவர தப்பக்கம் இழுத்த செல்வா!
நின்றவர்கள் அமரும்வகை கவிகள் சொல்லி
  நிலைத்தபுகழ் கொள்கின்ற கவிதை மன்னா!
மன்றலுக்குச் "சிவகெங்கைச் சீமை" விட்டு
  வந்ததிரு கண்ணதாச! வணக்கம் அண்ணா!

பெற்றபொருள் 'தமிழ்க்கற்பு' அதனைக் காத்த
  பெருமாட்டி தன்மடிக்கே ஓடி வந்தேன்
கற்பரசி கண்ணகியாள், தென்ன வன்தன்
  காப்பரசி பெருந்தேவி கால்கள் பட்ட
நற்றமிழர் முக்கூடல் மதுரை மண்ணே!
  நான்விழுந்து வணங்குகிறேன் தாயே உன்னை
கற்றவரே! கவிமணியே! மதுரை மன்றக்
  காவலரே! நாவலரே! வணக்கம் ஏற்பீர்!

பள்ளியிலே தண்ணிக்கையெனும் பழுவைத் தாங்கிப்
  பாடுபட்ட நேரத்தில், பறக்க விட்டார்
தெள்ளுதமிழ்க் கவிபாட மதுரை வந்து
  சேர்கவென தியாகராசர் ஓலை ஒன்றை
உள்நினைவு ஓடிவர, கடமைப் பண்போ
  உதைகொடுக்கும் சவுக்கதனால்; அதனால் காட்டு
முள்ளின்மேல் நின்றவனாய்க் கவிதை யாத்தேன்
  மூதறிவீர்! பிழைகாணின் பொறுத்தல் வேண்டும்.

தமிழ்க்கற்பைச் சிலகவியில் யாப்ப தென்றால்
  தரையின்மேல் நடப்பதில்லை கத்தி யின்மேல்,
நிமிர்ந்தபடி நடப்பதுவாம், நினைத்தால் கூட
  நெஞ்சயரும் பெரும்பொருளாம், இருந்தும் ஐய!
உமியில்லாத் தமிழ்க்கற்பாம் அரிசி காண்பேன்
  உங்கட்கும் படைத்திடுவேன், ஆனால் அந்த
அமிழ்தத்தை அழிக்கவரும் பகையும் காட்டி
  அதையொழிக்கச் செய்யும்வகை அதுவும் சொல்வேன்.

காப்பியத்தில் காப்பியனார் கழறு கின்றார்
  "கற்பென்றால் சரணமொடு புணர்த லாகும்"
மூப்புடைய முதுகுரவர் இருவர் பல்லோர்
  முன்னிலையில் நடக்கின்ற மணமே கற்பு.
யாப்புமுறைத் தமிழ்நூல்கள் எல்லாம் இந்த
  நற்கருத்தை வலியுறுத்தும், களவும் கற்பும்
பூப்பதனால் குடிமலரும் பொங்கும் இன்பம்!
  பூரித்தார் இவ்விதமாய்ச் சங்க மக்கள்.

களவுக்குப் பின்னாலே கற்பை வைத்த
  காதல்வழிப் பண்பாடே தமிழ்ப்பண் பாடு
விளக்கேற்ற ஒளிமிளிரும், அதுபோல் ஆண்பெண்
  விழிமலரக் களவுகொளும், வெற்றி காண
உளம்விரையக் கற்புவரும், உயிர்கள் கொஞ்சும்
  ஒன்றைவிட்டே ஒன்றகலா அன்றி லாகும்
குளக்கரையின் கொடியைப்போல் களவும் கற்பும்
  கூடியவர் இதயத்தில் பின்னிக் கொள்ளும்.

தமிழ்நாட்டின் தனிப்பண்பே காதல், வீரம்
  தமிழ்வாழ்வு உயர்ந்ததுவே கற்பால் தானே!
இமைக்கதவில் ஆடவரைப் பூட்டிக் காத்தல்
  இந்நாட்டு மகளிர்க்கே உண்டு, கற்பைச்
சுமையாக நினையாதார் பிறநாட் டார்கள்
  தொட்டிடலும் விட்டிடலும் விளையாட் டாகும்.
அமைந்துவிட்ட தமிழ்க்கற்பு, குறளின் வாழ்வு,
  ஆண்பெண்ணில், ஒருவர்க்கே ஒருத்தி என்றால்.

எவ்விடத்தும் தமிழ்வாழ்வில், நூலில், குற்றம்
  இல்லையென இயம்பவில்லை, அறிவேன் நானும்
ஒவ்வாத முறைகள்சில நாட்டில் தோன்றல்
  உலகியல்பு, ஆனால்மெய்த் தமிழன் என்றும்
அவ்வகையே சரியென்ற தில்லை, ஆனால்
  ஆபாசப் புராணம்போல் அவன்வாழ் வில்லை.
கொவ்வையிதழ்ப் பெண்ணினத்தைப் பழித்த தெல்லாம்
  குடிகெடுத்த இடைக்கால மக்க ளேதான்.

பரத்தையர்பாற் பிரிகின்ற பிரிவு, சங்கப்
  பழந்தமிழர் ஏட்டினிலே உண்டு, உண்மை.
தரமென்று நாமிதனைக் கூற வில்லை.
  தவறெனினும் தையலர்கள், பொறுத்தி ருந்தார்.
உரத்தோடு கூறுகிறேன், பிறப்பில் ஆண்கள்
  உயிரீனும் பெருவாய்ப்பைப் பெற்ற தாலே.
கரம்மாறித் திரிந்தார்கள், மரபாய்க் கூடக்
  கருதினர்கள் அவைதீமை எக்கா லத்தும்.

கற்புக்கு வித்தாகும் காதல், இன்பக்
  கடலுக்குப் படகாகும் களவுக் கண்கள்
வெற்புக்கு வனப்பாகும் அருவி, அன்பு
  விளைவுக்கே உரமாகும் ஒத்த உள்ளம்.
மற்போர்க்குச் சிறப்பாகும் வலிமை, காதல்
  வளர்ச்சிக்கே அரணாகும் வாஞ்சைச் சொற்கள்.
கற்றவரே! தமிழ்க்கற்புப் பிழைத்த தெல்லாம்
  காதல்மனப் பண்பால்தான், கடமை யால்தான்!

தமிழுலக இலக்கியங்கள் காப்பி யங்கள்
  தருநீதி நூல்களிடை எங்கும் கற்பு.
சமருக்குப் பெண்பாலர் கணவ னோடு
  தாவியுயிர் போக்கியதும் காதற் கற்பே!
தமர்விட்டுப் பெற்றவரைத் தவிக்க விட்டுத்
  தங்கமனக் கண்ணகியாள் கொழுன னோடு
இம்மதுரை வந்ததுவும், பாண்டித் தேவி
  இணைந்துயிரை விட்டதுவும் காதற் கற்பே!

அழியாத பொதுச்சொத்தாய், அண்ணன் தம்பி
  ஐவர்க்கும் ஒருத்தியெனல் வடக்கின் கற்பு.
குழிதோண்டிப் புதைத்தார்கள் தமிழர் பண்பைக்
  குறுமதியர் இவ்விதமாய் இடைக்கா லத்தில்
பழிவாங்கக் கடவுளையே, கற்பை விற்ற
  பாதகனாய்ப் படைத்தார்கள், பரமன், பாவம்
விழிக்கின்றான், என்செய்வான், வீழ்ந்து தொங்கும்
  விரிசடையே பிறர்கையில், சுண்டு கின்றார்.

பரமனுக்கே இருமகளிர், அவர்தாம் பெற்ற
  பாலகனும் சளைத்தவனா, பழனி வேலன்
இருகரத்தால் அணைத்துள்ளான் இரண்டு பெண்ணை
  இறைவன்திருக் கண்ணனுக்குப் பாமா, ருக்கு;
பொருந்துமிவர் கண்ணுக்குப் போதா தென்று
  போரணியாய்க் கோபியர்கள் லீலை வேறு.
உருப்படுமா தமிழ்க்கற்பு, ஒழித்தே விட்டார்
  உயர்கடவுள் வழக்கிற்கு மன்றம் எங்கே?

தருமர்க்குப் பாஞ்சாலி, அவளின் கற்பு
சரிபகடை இரண்டினிலை, மலிவுச் சந்தை
தருமர்தான் தொலையட்டும், தன்பங் காளி
சரியென்று விட்டானா அண்ணியா ரை
தெருவழியே கூந்தல்பிடித் திழுத்து வந்து
திருச்சபையில் துகிலுரிய ஆவல்கொண் டான்
பெருங்கற்பாம், பாரதத்தின் பிழையாக் கற்பாம்
பிறர்கேட்டால் நகைத்திடுவார் சொல்லிச் சொல்லி!

இதுவன்று தமிழ்க்கற்பு, தமிழர் நூலில்
இவையல்ல பண்புமுறை, வாழ்வே வேறு!
எதிர்மாருய்ச் சிலர்கருதும், கணிகை மாது
இன்பவல்லி மாதவியாள் கற்பை எண்ணின்
அதிலுமொரு அறமுண்டு, கோவ லன்தான்
ஆடுகலை யாலிணைந்து பிரிந்த போதும்
சதிசெய்தே அவள்மாற வில்லை வாழ்வில்
சாகும்வரை துறவுநிலை பூண்டு மாண்டாள்.

அதுகற்பு, அதுவுறுதி, அன்புப் பண்பு,
அழிவுக்கே நூல்யாத்தல் அந்தோ! தீமை.
எதுகூறித் தமிழ்க்கற்பை மறுக்க, மாற்றார்
எழுந்திட்ட போதினிலும், புராணக் குப்பை,
இதிகாச இழிநிலைகள் சங்க நூலில்
இருந்ததிலை எவரும்வீண் வாதம் செய்தே
குதிக்காதிர், கூரம்பு தமிழர் பண்பு,
குத்திவிடும் மனச்சான்றைக் குனிவீர் கீழே!

ஒளிவாழ்வை இருளாக்கிக், குருட ராக்கி
உலவுபுழு பூச்சியெனத் திரியச், சாதி
உளிகொண்டு தமிழினத்தைப் பிளந்து, பண்பை
உருகுலைத்தார், சிதறடித்தார், தீமைக் கள்ளர்.
நெளிபாம்பு நஞ்சுமன நெஞ்சத் தார்கள்
நீதிகெட மனுநீதி மன்றம் கண்டார்.
களிவாழ்வு போயிற்று, கற்பும் கூடக்
கடும்பசியால், பணத்திமிரால், கருக லாச்சு!

கடற்கரையில் பூங்காவில் காதல் கொண்டார்
கருத்தறிந்தும் பெற்றோர்கள் ஏற்க மாட்டார்.
மடக்குமொழி பேசிடுவார், சாதி காட்டி
மறுத்திடுவார், வாழ்ந்திடினும் வதையே செய்வார்.
உடலுணர்வு இகழ்ந்தவொரு கிழத்தைக் கூட்டி
உட்கார வைத்துமண முடித்துத் தாலி
வடக்கயிற்றை மாட்டிடுவார் மரணத் தூக்காய்.
வாழ்வெங்கே? கற்பெங்கே? பறக்கும் வானில்!

முதலென்றும், இடையென்றும், கடைய தென்றும்
முவ்வகையாய்ப் பிரிப்பதுவும் நீதி தானா?
முதற்கற்பு உயிருணர்ச்சி, ஆனால் சேர்த்து
முடிபோட்ட பின்இரண்டும் கொடுமை, என்பேன்.
கதவுக்குத் தாழுண்டு விதவை யர்தம்
கனலுக்குத் தாழில்லை, கருத்தில் கொள்வீர்!
விதவைக்கு வாழ்வுவரின் விடியும் கற்பு!
விரும்பாத திருமணத்தால் அழியும் கற்பு!

கற்பென்ற பெட்டகத்தைக் காத்தல், வாழ்வில்
கன்னியர்க்கும் ஆடவர்க்கும் பொதுவே யானால்
நிற்பாரா பெட்டகம்முன் கள்ளர் யாரும்?
நினைப்பாரா பிறர்சொத்தைத் திருடிக் கொள்ள!
விற்புருவ மங்கையரே! வேலைத் தாங்கும்
வீறுதமிழ் ஆடவரே! காதல் வாழ்வே
கற்புக்கு மூச்சாகும், அதனால் காதல்
கடிமணத்தை வரவேற்பீர்! நிலைக்கும் கற்பு!

திரைப்படத் தமிழ் எழுத்தாளர் சங்கம்

தேர்தலும், பாராட்டும்

17-10-'58 ல் எஸ். டி. எஸ். புரொடக்ஷன்ஸ் அலுவலகத்தில் திரைப்படத் தமிழ் எழுத்தாளர் சங்கக்கூட்டம் நடைபெற்றது. திரு. சின்ன அண்ணாமலை வழிமொழிய திரு. இளங்கோவன் தலைமை தாங்கினார். திரு. எஸ். டி. சுந்தரம் கூட்டத்திற்கு வந்த வாழ்த்துக்களையும், தந்திகளையும் படித்துவிட்டு, கூட்டத்தின் நோக்கங்களை விளக்கினார்.

எல்லா உறுப்பினர்களையும் சேர்த்து தேர்தல் மூலம் நிர்வாகிகளைத் தேர்ந்தெடுக்கும் வரையில், இடைக்காலத்துக்கு ஒரு அமைப்புக் குழு ஏற்படுத்த வேண்டுமென்று திரு. கண்ணதாசன் குறிப்பிட்டார். அதன்படி திரு. எஸ். டி. சுந்தரம் முன்மொழிந்த பெயர்களை ஏகமனதாக ஒப்புக்கொண்டு, அதன்படி தேர்ந்தெடுக்கப்பட்ட குழு அமைப்பு வருமாறு:

தலைவர் : சக்தி-கிருஷ்ணசாமி.

துணைத்தலைவர்கள் : இளங்கோவன், மு. கருணாநிதி.

செயலாளர்கள் : அ. மருதகாசி, இராம. அரங்கண்ணல்.

பொருளாளர் : ப. நீலகண்டன்.

செயற்குழு உறுப்பினர்கள்: ஏ. பி. நாகராஜன், எஸ். டி. சுந்தரம், கம்பதாசன், ஏ. எஸ். ஏ. சாமி, கு. சா. கிருஷ்ணமூர்த்தி. கண்ணதாசன், ஏ. கே. வேலன், சின்ன அண்ணாமலை, டி. கே. சண்முகம், சாண்டில்யன், இலட்சுமணதாஸ், முகவை இராசமாணிக்கம், தஞ்சை-இராமையாதாஸ், 'சங்கு' சுப்பிரமணியம்.

இத்துடன் சங்கத்திற்கான சட்டதிட்டங்களை உருவாக்க சட்ட திட்டக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் புதிய தலைவரை வாழ்த்தி வரவேற்று திரு. இளங்கோவன் பேசினார். தலைவரைப் பாராட்டி திருவாளர்கள் மு. கருணாநிதி, முகவை-இராசமாணிக்கம், சின்ன அண்ணாமலை ஆகியோர் பேசினர்.

திரு. எஸ். டி. சுந்தரம் கச்சா பிலிம் சம்பந்தமாக பத்திரிகைகளுக்கு வெளியிடும் நோக்கத்துடன் படித்த தீர்மானம் எல்லோராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

திரு. அரங்கண்ணல் நன்றி கூறினார்.

அன்று பல நண்பர்கள், சங்கத்தின் உடனடிச் செலவுகளுக்காக நன்கொடை வழங்கினர்.

கச்சா பிலிம் கட்டுப்பாட்டின் காரணமாக இலட்சக்கணக்கான குடும்பங்கள் பட்டினி கிடக்க நேரிடும் என்றும், பல்லாயிரக்கணக்கானவர்கள் வேலை இழக்க நேரிடும் என்றும், அரசாங்கத்திற்கு வருமானம் குறைந்துவிடும் என்றும், பொதுமக்கள் நல்ல தரமுள்ள படங்களைக் காணமுடியாத நிலை ஏற்பட்டுவிடும் என்றும், நாளடைவில், தமிழாக்கப்பட்ட 'இந்தி' படங்களைக் காண நேரிடும் என்றும், கள்ளமார்க்கெட் பெருகிவிடும் என்றும், கலைத்துறையில் அனுபவம் பெற்றவர்களையும் ஈடுபாடு கொண்டவர்களையும் கலந்துகொண்டு அரசாங்கம் கொள்கையை வகுக்க வேண்டும் என்றும், கச்சா பிலிம் இறக்குமதிக்கு உள்ள வெட்டை உடனேயே நீக்கவேண்டும் என்றும் சங்கக் கூட்டம், தீர்மானமூலம் கருத்தறிவித்தது.

தேர்ந்தெடுக்கப்பட்ட நிருவாகிகளைப் பாராட்டும் முறையில், கோடம்பாக்கம், பரணி படப்பிடிப்பு நிலையத்தில் 21-10-'58 மாலை 6 மணி அளவில், உறுப்பினர் அனைவருக்கும் கண்ணதாசன் ஒரு விருந்து ஏற்பாடு செய்திருந்தார்.

முதலில் தேனீர் அளிக்கப்பட்ட பின்னர், சங்கத்தின் பேரவைக் கூட்டம் நடைபெற்றது.

பேரவைக் கூட்டத்துக்கு தலைவர் சக்தி-கிருஷ்ணசாமி தலைமை வகித்தார்.

கூட்டத்தில் உறுப்பினர்கள் பலரும் தங்கள் தங்கள் கருத்துக்களையும், சங்கம் வளர்வதற்கான வழிவகைகளையும் விரிவாக எடுத்துரைத்தார்கள். அவர்களுடைய அந்த ஆலோசனைகள் பாராட்டத்தக்க முறையில் அமைந்திருந்தன.

இறுதியில், முன்பு அமைக்கப்பட்ட சட்ட திட்டக் குழுவில் மேலும் பலர் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். சட்டதிட்டக் குழுவுக்குச் செயலாளராகப் பணிபுரிய கண்ணதாசன் கேட்டுக்கொள்ளப்பட்டார். குழு உருவாக்கும் சட்டதிட்டம் பேரவையில் ஒப்புக்கொள்ளப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

முடிவில், செயலாளர்களில் ஒருவரான திரு. இராம-அரங்கண்ணல் நன்றி தெரிவித்தார்.

அடுத்து நடைபெற்ற விருந்துக்குப் பின்னர், திரு. டி. ஆர். மகாலிங்கம் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

ஊமையன் கோட்டை

கண்ணதாசன்

எல்லை விடுதியில் எவ்வளவோ பேர் வந்து தங்கியிருக்கிறார்கள். குடும்பத்தோடு சிலரும், தனியாகப் பலரும் அங்கே வந்து தங்கியதை ஆச்சரியத்தோடு பார்த்ததில்லை அஞ்சுகம். இந்தப் புதிய வழிப்போக்கன் வீரத்தேவன், அவளை மிகவும் கவர்ந்தான். அவனைப் பார்த்ததற்குப் பின்னால் அவள் நடையிலேகூட மாற்றம் பிறந்தது. மீன் வாங்கி வந்த பாத்திரத்தை அடுப்படிக்குள் வைத்த அஞ்சுகம், சமயலைப்பற்றித் தந்தையிடம் கேட்க வருபவள் போல் வீரத்தேவன் இருக்குமிடத்துக்கு மீண்டும் வந்தாள். முதல் சந்திப்புக்குப் பிறகு இராமசாமித் தேவரிடம், வீரத்தேவன் பேசிய தொனியே வேறு விதமாக இருந்தது. உண்மையிலேயே அறிவுள்ளவன் தன்னைப் பற்றிப் பேசிக் கொள்ள மாட்டான். ஆனால் சில நேரங்களில் சில காரியங்களுக்கு அது தேவைப் படுகிறது. அழகே உருவான அஞ்சுகத்தைப் பார்த்துவிட்ட வீரத்தேவன், தேவர் பேச்சைத் திருப்பி தன் பெருமையைப் பேசத் துவங்கினான். திட்டமிட்டுக்கொண்டு அப்படிப் பேசவில்லை. இயற்கையாகவே தொண்டை அந்த நிலைக்கு வளைந்தது. அவன் இல்லாவிட்டால், ஊமைத்துரையின் விடுதலைக்கு முயற்சிக்க ஆட்கவில்லை. ஆனால் அதை அவனே தான் சொல்ல வேண்டுமா? சொன்னான் வீரத்தேவன். மறைந்திருந்து கேட்டாள் அஞ்சுகம். அந்தப் பெருமைகளைக் கேட்கக் கேட்க அவள் மேனி சிலிர்த்தது. ஆடவன் அழகு வீரத்திலேயே அடங்கியிருப்பதாகக் கருதுவது மறவர் குலம். வீரத்தேவனுடைய வீரத்தில் அஞ்சுகம் மயங்கினாள். சிறிது நேரம் தன்னை மறந்து, மறைவிலிருந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்த அவள், நினைவு வந்தவளாய் 'அப்பா, மீனைப் பொறிக்கட்டுமா?' என்று கேட்டாள். 'என்ன தம்பி, உனக்கு எது பிடிக்கும்?' என்று கேட்டார் தேவர். 'கூட்டு எனக்குப் பிடிக்கும்' என்றான் வீரத்தேவன். மீனைக் கூட்டு வைப்பதா?—அஞ்சுகம் திகைத்தாள். 'கத்தரிக்காய்க் கூட்டும், மீன் பொறியலும்' என்று விளக்கம் தந்தான் வீரத்தேவன். தேவர் சிரித்தார், அஞ்சுகம் உள்ளே சென்றாள்.

சமையல் முடிந்தது. எப்பொழுதும் கறுப்பாயிஆத்தாளே சமைப்பது வழக்கம். இப்போது அஞ்சுகம் தானே சமைத்திருந்தாள். சிலேட் விளக்கை எடுத்துக்கொண்டு, தந்தையும் வீரத்தேவனும் இருக்குமிடத்துக்கு வந்தாள் அஞ்சுகம். படுத்துப் புரண்டுகொண்டிருந்த வீரத்தேவனைப் பார்த்தும் பார்க்காதவளாய், 'சாப்பிடலாம்' என்றாள். தேவர் வாரிக் கட்டிக்கொண்டு எழுந்தார். 'தம்பி, எழுந்திரு; எழுந்திரு!' என்றார். வீரத்தேவன் எழுந்தான். கைகால்களைக் கழுவிக்கொண்டு சாப்பிட உட்கார்ந்தான். ஆத்தாளை முந்திக்கொண்டு அவளே பறிமாறினாள். தேவரின் இலையை விட வீரத்தேவன் இலையில் கறிகள் அதிகமாக விழுந்தன. அஞ்சுகத்தின் மனவேகம் கைவழியே பாய்ந்தது. வீரத்தேவன் நன்றாகச் சாப்பிட்டான். அடிக்கடி, 'சாப்பாடு பிரம்மாதம்; பிரம்மாதம்!' என்றான். கூட்டிலே உப்பு; மீன் புளிக்கிறது; சோறு குளைந்துவிட்டது தேவருக்கு இது தெரிகிறது; வீரத்தேவனோ பாராட்டியபடி நிறுத்தாமல் சாப்பிடுகிறான்.

பாய் விரித்து இரண்டு தலையணைகளைப் போட்டிருந்தாள் அஞ்சுகம். அதன் அருகிலேயே சமுக்காளம் விரிக்கப்பட்டிருந்தது தேவருக்கு. களைப்புற்றிருந்த வீரத்தேவன், சாப்பிட்ட உடனேயே படுத்துவிட்டான். சில விநாடிகளிலேயே தூக்கம் அவன் கண்களைத் தழுவியது. இந்தமாதிரி நேரங்களில் கனவு வராமல் போகுமா?

ஒரு பூங்கா. பல நிறமான மலர்கள் செழிப்போடு மலர்ந்திருக்கின்றன. நதி ஓடிக்கொண்டிருக்கிறது. மறவர் சீமைக்கே உரித்தான உருளைக்கற்கள் மின்னிக்கொண்டிருக்கின்றன. வீரத்தேவன் அங்கே ஓடி வருகிறான். அவன் கால்களைத் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்திருக்கின்றன. நெற்றியிலே இரத்தம் வழிந்துகொண்டிருக்கிறது. மார்பிலே கிறல்கள். கீழே விழுந்து தத்தித் தவழ்கிறான். 'அஞ்சுகம்! அஞ்சுகம்!' என்று கதறுகிறான். அங்கே மலர் கொய்துகொண்டிருந்த அஞ்சுகம் ஓடிவருகிறாள். அவனைக் கட்டிப்பிடித்துத் தூக்குகிறாள். முந்தானையைக் கிழித்துக் காயங்களுக்குக் கட்டுப் போடுகிறாள். அவன் முகத்தோடு முகம் வைத்து, 'கவலைப்படாதீர்கள்; கவலைப்படாதீர்கள்!' என்கிறாள். அவன் மெதுவாக எழுந்து உட்காருகிறான். அஞ்சுகத்தைத் தன் மடியிலே சாய்த்துக்கொள்கிறான். அவன் உடம்பிலிருந்த காயங்கள் மறைந்துவிடுகின்றன. அஞ்சுகத்தை அப்படியே வாரி எடுத்து, மார்போடணைத்துக் கொள்கிறான்......

மீசை குத்துகிறது. திடுக்கிட்டு விழிக்கிறான். தேவரும் விழித்துக்கொண்டே 'என்ன தம்பி?' என்கிறார். வீரத்தேவனுக்கு இரண்டு வகையான சங்கடங்கள். கனவு கலைந்துவிட்டதே என்பது ஒன்று. தான் ஏதோ கனவுகண்டதை தேவர் தெரிந்து கொண்டுவிட்டாரே என்பது மற்றொன்று. 'ஒன்றுமில்லை....... கனவு...' என்று இழுத்தபடி திரும்பிப் படுத்துக்கொண்ட வீரத்தேவன், உறங்குவதற்கு முயற்சித்தான். உறக்கமாவரும்? மெதுவாகக் கண்களை விழித்து, விடுதியின் இரண்டாங்கட்டைப் பார்த்தான். உள்ளே சிறு சிலேட் விளக்கு எரிந்துகொண்டிருந்தது. அதன் அருகில் பாய் போட்டு அஞ்சுகம் தூங்கிக் கொண்டிருந்தாள். அந்த மங்கலான வெளிச்சத்தில், அவள் முகத்தில் புது அழகு தென்பட்டது. அப்படியே சிறிதுநேரம் பார்த்துக்கொண்டிருந்தான். சற்றுப் புரண்டு படுத்தான். பிறகு எழுந்து உட்கார்ந்துவிட்டான்.

தேய்நிலவு காலம். எனினும் வானத்தில் நிலவு இருந்தது. எழுந்து சற்று வெளியிலே போய் வருவோம் என்று புறப்பட்டான் வீரத்தேவன். பெரியதோர் திண்ணை இருந்த முன்பகுதிக்கு வந்தான். அவன் கால் ஒரு கூடையைத் தட்டிவிட்டது. மூடப்பட்டிருந்த கோழி சத்தம் போட்டுக்கொண்டே தாவி திண்ணைக்கு ஓடிற்று. வீரத்தேவன் திடுக்கிட்டு, அந்தக் கோழியைப் பிடித்து மூட முயன்றான். கோழி அவன் கைக்கு வந்ததும், பலமாகச் சத்தமிட்டது. உள்ளே அரைகுறையாகத் தூங்கிக் கொண்டிருந்த அஞ்சுகம், கோழியின் சத்தத்தைக்கேட்டு உடனே விழித்துக் கொண்டாள். எவனோ திருடன் போலிருக்கிறது என்று எண்ணி, கையில் ஒரு கம்பை எடுத்துக் கொண்டாள். வீரத்தேவன் படுத்திருந்த இடத்தைக் கடந்துதான் வெளியே வரவேண்டும். படுக்கை அருகில் வந்தபோது பார்த்தாள். வீரத்தேவனைக் காணோம். சந்தேகத்தோடு வெளியே வந்தாள். அங்கே வீரத்தேவன் கோழியைப் பிடித்து மூடுவதை நிலா வெளிச்சத்தில் கண்டாள்.

'கூடையைத் தட்டிட்டீங்களா?...' என்றாள் மெதுவாக.

வீரத்தேவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான்.

'ஆமாம்...' என்று இழுத்தான்.

'குத்தமில்லை......நான் மூடறேன்; நீங்க போய்ப் படுத்துக்கங்க...' என்றாள்.

'மூடிட்டேன்' என்றான் அவன்.

காத்து வரலையின்னு வெளியில படுத்துக்கிறீங்களா?' என்றாள் அவள்.

வீரத்தேவன் மெதுவாகச் சிரித்தபடி, 'அடுப்படியில மட்டும் காத்து வருதா?' என்றான்.

அவன் கேட்டது அவளுக்குப் புரியவில்லை. அவளையும் வெளியில் வந்து தூங்கச் சொல்கிறானா? பொல்லாதவனாக இருப்பான் போலிருக்கிறதே!

அவள் பதில் சொல்லாமல் உள்ளே போய், அவன் படுத்திருந்த பாயைச் சுருட்டி எடுத்துக் கொண்டு வெளியில் வந்தாள். திண்ணையில் அதை விரித்தாள். வீரத்தேவன் உட்கார்ந்தான். பரிதாபகரமாக அவளைப் பார்த்தான். உள்ளே சென்றுவிட அவளுக்கு மனமில்லை. வெளிப்புறத்தில் கீழே இறங்கி, ஒரு மரத்தடியில் போய் நின்று கொண்டாள். வீரத்தேவன் எழுந்து, படபடக்கும் நெஞ்சத்தோடு அவள் அருகில் போனான். அவன் வருவது அவள் காதுகளுக்குக் கேட்டது. திரும்பிப் பார்க்காமல் நின்று கொண்டிருந்தாள். வீரத்தேவன் காற்றுக்குரலில், 'அஞ்சுகம்!' என்றான்:

'உம்...'—அவள் நிமிரவில்லை.

'ஏன் இங்கேயே நின்று விட்டாய்?'

'உள்ளே காத்து வரலை...'

'இங்கேயேதான் நிற்கப்போகிறாயா?'

'உட்காரப் போறேன்!'

'நீ தனியா இங்கே இருக்கலாமா?'

'தனியா இருக்கயில நீங்க வந்து பேசலாமா?'

'எண்ணைக்குமே என் மனசு இப்படித் துடிச்சதில்லை. யாரையும் நான் நிமிர்ந்துகூடப் பார்க்க மாட்டேன். இன்னைக்கு என் மனசே கெட்டுப் போச்சு!'

'இப்படித்தான் எல்லார் கிட்டயும் பேசுவீங்களா?'

'எந்தப் பொண்ணுகிட்டயும் நான் பேசினதில்லை!'

'இல்லாமயா இவ்வளவு தைரியம் வரும்?'

'உறுதியாச் சொல்றேன், புரட்சியிலதான் எனக்குப் பழக்கம்!'

'காதல் புரட்சியிலயா?'

'பாத்தியா, என்னைத் தப்பாவா கணக்குப் போடுறே? அஞ்சுகம்! உன்னைக் கண்ட உடனேதான் எனக்கு என்னமோ போலிருக்கு. எனக்கு அப்பா, ஆத்தா யாரும் இல்லை. ஒரு தங்கச்சி இருந்தா. அவளையும் யாரோ தூக்கிக்கிட்டுப் போயிட்டாங்க'...

—இதைச் சொல்லும்போது வீரத்தேவன் குரல் தழுதழுத்தது.

அஞ்சுகம் பரிதாபத்தோடு திரும்பிப் பார்த்தாள்.

வீரத்தேவன் கண்களில் கண்ணீர் நிறைந்திருந்ததைக் கண்டாள்.

'அழாதீங்க, அழாதீங்க! என்றாள்.

அவன் கண்களைத் துடைக்கக் கையை நீட்டியவள், பின்னுக்கு இழுத்துக்கொண்டாள்.

'அஞ்சுகம்!' என்றான் வீரத்தேவன்.

காதல் பொங்க, 'என்ன?' என்றாள் அஞ்சுகம்.

அப்படியே அவளை அணைத்துக்கொண்டான் வீரத்தேவன்.

நிறைந்திருந்த கண்ணீர் வழிந்து, அஞ்சுகத்தின் முகத்தில் விழுந்தது. அவள் முழுக்க முழுக்க அவன் வசமானாள்.

பிறகு அவர்கள் பேசினார்கள் பேசினார்கள், விடியும்வரை பேசினார்கள். பாதையிலே மாடுகள் செல்வதைப் பார்த்து பொழுது விடிந்துவிட்டதை உணர்ந்து விலகினார்கள். ஒருவர் இல்லாமல் ஒருவர் இல்லை என்ற முடிவுக்கு இருவரும் வந்திருந்தார்கள்.

இராமசாமித் தேவர் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார். வீரத்தேவன் அவரை எழுப்பினான். ஆத்தாளை மகள் எழுப்பினாள். அப்பொழுதே தேவரும், வீரத்தேவனும் சிவகெங்கைக்குப் போகப் புறப்பட்டார்கள். அஞ்சுகம் அவசர அவசரமாக சூடான ஆவாரம்பூத்தண்ணீர் போட்டுக் கொண்டு வந்தாள். ஒரு குவளையைப் பெருமையோடு தந்தையிடமும், மறு குவளையை உரிமையோடு வீரத்தேவனிடமும் கொடுத்தாள். அவளையே பார்த்த வண்ணம் சுவைத்து அருந்தினான் வீரத்தேவன். பிறகு தேவரோடு புறப்பட்டான்.

சிவகெங்கை அரண்மனை அதிகாலையிலேயே சுறு சுறுப்பாக இருந்தது. வெளியிலே காவல்காரர்கள் இல்லை. தேவரும், வீரத்தேவனும் உள்ளே நுழைந்தார்கள். மூத்த மருதுபாண்டியர் அதிகாலையிலேயே எழுந்துவிடுவார். காலை உணவு முடிவதற்குள், தன் கீழிருப்பவர்களுக்கு இடவேண்டிய ஆணைகளை இட்டுவிடுவார். தேவரும், வீரத்தேவனும் வந்தபோது, சருகணி மாதாகோயிலுக்கு அளிக்கப் போகும் செப்புப் பட்டயத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். மறுநாளைக்கு மறுநாள் குன்றக்குடி முருகனுக்கு அவரது சாத்துபடி. ஏராளமான இளநீரும், பழங்களும் வண்டியில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தன. செப்புப்பட்டயத்தைத் துடைத்து, பக்கத்திலிருந்த ஒரு காரியஸ்தரிடம் கொடுத்துவிட்டு, வண்டிகள் இருக்குமிடத்துக்கு வந்தார். தேவரும் வீரத்தேவனும் அங்கே வந்தார்கள். அவர்கள் வணங்குவதற்கு முன்னாலேயே, மருதேந்திரர் அவர்களைக் கண்டுகொண்டு 'வணக்கம் ஐயா!' தேவர் மகன் என்ன திடீரென்று அதிகாலையில்...?' என்று இழுத்தார்.

இராமசாமித்தேவர் மரியாதையோடு கைகளைக் கட்டிக்கொண்டு, 'ஒன்றுமில்லை...இவர் பாளையங்கோட்டையிலிருந்து தங்களைப் பார்ப்பதற்காக வந்திருக்கிறார். சமூகத்தில் பல விஷயங்கள் பேச வேண்டுமாம். இரவு நம் விடுதியில்தான் தங்கினார்...' என்றார்.

'அப்படியா? பாளையங்கோட்டையிலிருந்தா? மிக்க மகிழ்ச்சி. ஏதேனும் விஷயம் உண்டா?' என்று கேட்டார் மருதேந்திரர்.

வண்டியில் இளநீர் ஏற்றிக்கொண்டிருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள். வீரத்தேவன் அங்கே எல்லா விஷயங்களையும் சொல்வதற்குத் தயங்கினான். அவன் தயக்கத்தைக் கண்ட மருதரசர், ஏதேனும் இரகசியம் இருக்கலாம் என்று கருதி 'உள்ளே வாருங்கள்' என்று அழைத்தார்.

மூவரும் அரண்மனை சலவைக்கல் மண்டபத்தில் வந்து அமர்ந்தார்கள்.

'என்ன விஷயம்?' என்று கேட்டார் மருதேந்திரர்.

'நான் பாளையங்கோட்டையிலிருந்து வருகிறேன். குமாரசாமித்துரை ஒன்றரை ஆண்டுகளாக சிறைச்சாலையில் கிடக்கிறார். நாங்கள் பத்தாயிரம் இளைஞர்களுக்குமேல் ஒன்றாகச் சேர்ந்து, பாளையங்கோட்டைச் சிறையை உடைத்து அவரை விடுவிப்பதென முடிவுகட்டிக் கொண்டிருக்கிறோம். எல்லாவற்றையும் ஓரளவுக்குத் திட்டமாகவே செய்து வைத்திருக்கிறோம். பணக் கஷ்டம்தான் சொல்ல முடியாத கஷ்டமாக இருக்கிறது. நெல்வேலி சுப்பிரமணிய பிள்ளை பணம் கொடுக்கச் சம்மதித்தார். ஆனால் ஊமைத்துரையின் கையெழுத்தைக் கேட்டார். எப்படியாவது அவர் கையெழுத்தை வாங்க முயற்சித்தோம்; அது முடியவில்லை. நாளோ நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் எங்களுக்கு உதவக்கூடியவர்கள் தாங்கள்தான் என்பதால், சமூகத்தை நாடி வந்தேன்' என்று நிறுத்தினான் வீரத்தேவன்.

மூத்த மருதுபாண்டியர் இந்தச் செய்திகளை அமைதியாகக் கேட்டார். கவலையோடு சிந்தனையில் ஆழ்ந்தார். வீரத்தேவன் மனம் அடித்துக் கொண்டது. மருதேந்திரர் சொல்லப்போகும் பதிலை ஆவலோடு எதிர்பார்த்தான்.

'ஊமைத்துரையை விடுதலை செய்வதன்மூலம், என்ன பலன் விளையும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?' என்று கேட்டார் மருதேந்திரர்.

'மீண்டும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையைக் கட்டுவது; கும்பினியாரை முறியடிப்பது'—இவையெல்லாம் அடுத்தடுத்து உள்ள திட்டங்கள்' என்றான் வீரத்தேவன்.

'நடக்கக்கூடியவற்றைச் சிந்திப்பது நல்லது. பெரும்பாலான பாளையங்களை அழித்துவிட்டார்கள் கும்பினியார். சண்டை என்றாலே மக்களுக்குச் சலிப்பு வந்துவிட்டது. பயனற்ற சண்டைகளில் காலமும், பொருளும், உயிர்களும் அழிவதை அவர்கள் விரும்பவில்லை. நிச்சயமாக பாஞ்சாலங்குறிச்சி அரசை மறுபடியும் நிலைக்கவைக்க முடியுமென்றால், இந்த முயற்சி செய்வதில் எனக்கு மறுப்பில்லை. பொம்மு நாயக்கரைக் காட்டிலும், இளைய நாயக்கருக்கு மக்களிடம் செல்வாக்கு இருப்பதை நான் கேள்விப்பட்டேன். என்ன தான் இருந்தாலும், வெள்ளைக்காரத் திருடர்கள் கணக்கில்லாத பீரங்கிகளைக் கொண்டுவந்து இறக்கியிருக்கிறார்கள். உங்கள் முயற்சியை நான் பலவீனப்படுத்துவதாக நினைக்கக்கூடாது. 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை.' படபடவென்று ஓடிப்போய் எதிலும் விழுந்து சாவதை நான் விரும்பமாட்டேன். கொஞ்சம் காலம் தாழ்த்தினால் காரியம் முடியும் என்றால், அதுவரை கோழையைப்போல் இருப்பதில்கூடத் தவறில்லை. இன்றைக்கு சிவகெங்கை இருக்கிற வசதிக்கு, புதுக்கோட்டையைக்கூடப் பிடித்துவிட முடியும். அந்த வெற்றி என்றும் நிலைக்குமா என்பதைத்தான் நினைக்கவேண்டும். நான் சொல்லுவதைத் தவறாக நினைத்துக்கொள்ள வேண்டாம். பத்தாயிரம் இளைஞர்கள் சின்ன நாயக்கருக்காகத் திரண்டு எழுகிறார்கள் என்பதே பெருமைக்குரியதுதான். ஏதோ முயற்சியுங்கள். உங்களுக்கு வெற்றி கிட்ட வேண்டும் என்றுதான் நான் ஆசைப்படுகிறேன். பொருளுதவி சம்பந்தமாக தம்பியைக் கலந்து பேசுகிறேன். பாளையத்தின் வரவு செலவுகளை அவன்தான் கவனித்து வருகிறான். எதற்கும் இன்றுமாலை மீண்டும் சந்தியுங்கள்' என்றார் மருதேந்திரர்.

'நம்பிக்கையோடு இருக்கிறேன்' என்றான் வீரத்தேவன்.

'இப்போதே உறுதி சொல்லும்படி என்னைக் கட்டாயப்படுத்த வேண்டாம். மாலையில் வந்து பாருங்கள்' என்று கூறிவிட்டு எழுந்தார் மருதேந்திரர்.

'போய் வருகிறேன்' என்று கையெடுத்துக் கும்பிட்டார் இராமசாமித் தேவர்.

'போய் வாருங்கள். அஞ்சுகம் சுகமாக இருக்கிறாளா? ராக்காத்தாளுக்கு அவளைத்தான் மிகவும் பிடித்திருக்கிறது...' என்றபடி சிரித்தார் மருதுபாண்டியர்.

'சுகமாய் இருக்கிறாள். மாலையில் அவளையும் அழைத்துக் கொண்டு வருகிறேன்' என்று கூறிவிட்டுப் புறப்பட்டார் இராமசாமித் தேவர்.

வீரத்தேவன் அவரைப் பின் தொடர்ந்தான்.

மருதரசரோடு இவர்கள் பேசிய பேச்சை மறைவிலிருந்து கவனித்துக் கொண்டிருந்தான் கறுத்தான் என்னும் ஒரு தளபதி. மருதரசரிடம் அவனுக்குச் செல்வாக்கு அதிகம். வெளிவாசலை நோக்கிப் போய்க்கொண்டிருந்த வீரத்தேவனையும், இராமசாமித் தேவரையும் அவன் நிறுத்தினான்.

'ஓய், தேவரே! கம்பளத்தான் சம்பந்தமாய் எவனும் இங்கே வரக்கூடாது. பாஞ்சாலங்குறிச்சி பொட்டைக்காடாய் ஆனது போல் சிவகெங்கையும் ஆக நாங்கள் விரும்பவில்லை. மரியாதையாக இவனை இப்பொழுதே பாளையங்கோட்டைக்கு அனுப்பிவிடும். இல்லையென்றால் உமது மரியாதையும் கெட்டுவிடும். ஊமைத்துரை செத்தாலென்ன, வாழ்ந்தாலென்ன? ஜாக்கிரதை!' என்று கூறிவிட்டுப் போய்விட்டான்.

இராமசாமித்தேவருக்கு 'திக்' கென்றது. வீரத்தேவனுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

தொடரும்

திருத்தம்

இந்த இதழ் பக்கம் 4-ல் கவியரங்கில் கண்ணதாசன் முன்னுரை எட்டாவது வரியில் 'சீராடும் கற்புநெறி செப்புவான் இவ்வவையில்' என்றிருப்பது 'சீராரும் கற்புநெறி செப்புகின்றான்' என்றிருக்கவேண்டும்.

புலித்தேவனா, கட்டபொம்மனா?

2

புலித்தேவனா, கட்டபொம்மனா?

—என்ற கேள்விக்குப் பின்னால், தமிழகத்தில் இரண்டு கட்சிகள் இருக்கின்றன. அந்த இரண்டும் அரசியல் கட்சிகளா, அல்லது கலாச்சாரக் கட்சிகளா, சமுதாய, பொருளாதாரத் துறையில் என்ன திட்டவட்டமான கொள்கைகளை வைத்திருக்கின்றன என்பவையெல்லாம் நமக்குப் புரியவில்லை. அந்த இரண்டில் ஒன்று, சிலகாலம் தன்னை அரசியல் கட்சி என்று 'பீத்தி'க் கொள்ளும்; திடீரென்று, 'இல்லை, இல்லை நான் கலாச்சாரக் கட்சிதான்' என்று அறிக்கை விடும். மற்றொன்று இப்போதுதான் அரும்பி இருக்கும் புதிய கட்சி. அன்னையையும், மருத்துவச்சிகளையும், டாக்டர்களையும் திக்குமுக்காட வைத்து அட்டகாசத்துடன் பிரசவமாகும் கடைசிக் குழந்தையைப்போல, 'ஆஹா! ஊஹூ!' என்ற ஆர்ப்பாட்டம் செய்து கொண்டு பிறந்திருக்கும் கட்சி அது.

இந்த இரண்டு கட்சிகளுக்கும் இருக்கும் நல்ல வாய்ப்பு இன்றைய தினம் தமிழகத்தில் வளர்ந்திருக்கும் நாட்டு, இன, மொழி உணர்ச்சிதான். அந்த உணர்ச்சிகளைத் தோற்றுவிப்பதற்கே உதயமாகியிருப்பதாகத் 'தம்பட்டம் அடித்து'க் கொள்ளும் இந்த இரண்டு கட்சிகளும், அந்த உணர்ச்சிகளை உண்டாக்கி தமிழகத்திற்கு உயிரூட்டுகின்றனவா, அல்லது தமிழ் மண்ணில் வளர்ந்திருக்கும் அந்த உணர்ச்சியில் தாங்கள் உயிர்வாழ்கின்றனவா என்பது ஊர் அறிந்த இரகசியமாகும்!

தமிழகம் ஒரு காலத்தில் இருள் நிறைந்த பூமியாக இருந்தது. வரலாற்றுக்கு முற்பட்ட உலகத் தொடக்க காலத்தை நாம் குறிப்பிடவில்லை; ஒரு, கால் நூற்றாண்டுக்கு முன்புவரை தமிழ்நாடு ஒளி பெற்றதாகத் திகழவில்லை. தமிழரின் மொழித் துறையில், அரசியல், பொருளாதாரத்தில், வாழ்வியலில் எங்கும் இருளின் ஆட்சியே நிலவியது.

அரசியலில் மாற்றாரின் அடிமை.

பொருளாதாரத்தில் பிறரின் விற்பனைப் பொருள்கள் விலை கூறப்படும் சந்தை.

சமுதாயத்துறையில் அநாகரிகமான சனாதனம்.

மொழியில் மற்ற மொழிகளின் ஆக்கிரமிப்பு.

இந்த நிலையில் வாடி, வதங்கி, திக்கித்திணறிக் கொண்டிருந்தது தமிழ்நாடு நெடுங்காலம்.

அப்போதுதான் தமிழ்வானில் திராவிட இயக்கம் எனும் விடிவெள்ளி பிறந்து, உதயத்தின் ஒளிச்சுடர்களைப் பரவச்செய்து தமிழர்க்கே பயன்படத் தன்னை ஒப்படைத்தது.

திராவிட இயக்கம் பிறக்கு முன்—

காங்கிரஸ் கட்சி இருந்தது.

கம்யூனிஸ்டுகள் இருந்தார்கள்.

சோஷலிஸ்டுகள் இருந்தார்கள்.

இந்துமகா சபை இருந்தது.

இன்னும் எத்தனை எத்தனையோ கட்சிகள் இருந்தன.

ஆனால் அவை எல்லாவற்றிற்கும் முன்னாலும் 'அகில இந்திய' என்ற அடைமொழியும் கூடவே இருந்தது. தமிழர்க்கான அமைப்பு, தமிழ் மண்ணிலேயே பிறந்த அமைப்பு, தமிழரின் வாழ்வையும், வளத்தையும் பேணவே பிறந்த அமைப்பு எதுவும் தோன்றவில்லை. தோன்றுவதற்கும் அந்த 'அகில இந்தியா'க்கள் இடம் தரவில்லை.

திராவிட இயக்கம் பிறந்தது.

புத்தம் புதிய மாற்றங்கள் நாடெங்கும் ஏற்பட்டன.

'நாம் அவ்வளவு தருகிறோம். அதற்கு இவ்வளவுதானா தர வேண்டும்?'

'எங்களைப் பிறர் ஆள நாங்கள் சகித்துக் கொண்டிருக்க மாட்டோம்; எங்களுக்கு நாங்களே எஜமானர்கள்!'

'எங்கள் தாயகம் மாற்றாரின் வேட்டைக்காடு அல்ல; பிறரின் பொருள்கள் விற்பனை செய்யப்படும் சந்தையும் அல்ல. எங்கள் பொருளாதாரம் வளர்ச்சியடைய திட்டம் வேண்டும். தேவையான திட்டங்கள் செய்து கொள்ள எங்களுக்கு அதிகாரம் வேண்டும்!'

'பார்ப்பான்-பறையன் என்ற ஜாதி வேறுபாடு அர்த்தமற்றது. சனாதனதர்மத்தை வாழவைப்பதன்மூலம், சமுதாயத்தைக் கீழ் நோக்கியே இழுத்துச் செல்கிறோம். ஆண்டான் - அடிமை ஆண்டவனின் படைப்பல்ல. அவரவர்க்கும் வசதிகள் வழங்கப்பட்டால் இருப்பதைவிட எத்தனையோ மடங்கு உயர்வாகக் காட்டிக்கொள்ள நிச்சயமாக இயலும்!'

'"எல்லோருக்கும் வேலை; எல்லோருக்கும் சோறு" என்ற அடிப்படையில், பாட்டாளிமக்களின் பிரச்சினைகள் கவனிக்கப்படவேண்டும். எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி முன்னேற வேண்டும்!'

'தமிழ் உயர்தனிச்செம்மொழி. தனித்தியங்கும் ஆற்றல் மிக்க உலகப் பெரும்மொழி. அதனை ஒழித்துக்கட்ட முயலும் எந்த முயற்சிக்கும் இடம் தரமாட்டோம். பிறமொழி நுழைவு எந்த உருவில் வந்தாலும் உயிர் கொடுத்துக் காப்போம்!'

'சாதிகளற்ற, சமதர்மத்தை அடிப்படையாகக் கொண்ட முற்போக்கு சமுதாயத்தை உருவாக்குவோம். தமிழர்க்கே உரித்தான பண்பையும், கலையையும், இலக்கியத்தையும், கலாச்சாரத்தையும் வளர்ப்போம்!'

—புதிய முழக்கங்கள் தமிழகமெங்கணும் எழுந்தன. ஒரு காலத்தில் வெளியிடவே முடியாத கருத்துக்கள் தாராளமாக உலா வந்தன. நாடு, எல்லாவற்றையும் தடை சொல்லாது கேட்டு, கேட்டவற்றையெல்லாம் சிந்தித்து, சிந்தனையின் நல்ல முடிவுகளை - அறிவுக்குப் பொருத்தமான முடிவுகளை அட்டியின்றி ஏற்கத் தொடங்கியது. எங்கும் விழிப்பு! மொழியின் சிறப்புப் பற்றிப் பேசுபவன், இனத்தின் இழிவு நீங்கப் பாடுபடுவன், நாட்டின் நல்வாழ்வுக்கு உழைப்பவன் யாராக இருந்தாலும் அவன் பாராட்டப்பட்டான்; மதிக்கப்பட்டான்.

இந்த நிலை ஏற்பட திராவிட இயக்கம் ஆற்றிய பணிகள் ஏராளம். தங்கள் கருத்துகளை வெளியிட திராவிட இயக்கத்தாருக்கு சுதந்திரம் அளிக்கப்படவில்லை. சமூகத்தில் அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் இழிந்தவர்களாகக் கருதப்பட்டுப் புறக்கணிக்கப் பட்டார்கள்; கண்ட கண்ட இடங்களிலெல்லாம் 'திடீர், திடீர்' என்று தாக்கப் பட்டார்கள். ஆட்சியாளரின் அடக்குமுறை கட்டுக்கடங்காது நீண்டது. பலர் சிறைப் பறவைகளாயினர். பலர் படுகாயமடைந்தார்கள். அன்னையை, அன்பு மனைவியை, அருமைக் குழந்தைகளைப் பிரிந்து, அவதிகளை அணைத்தபடி காலத்தை ஓட்டினார்கள் அவர்கள். உலகுக்குத் தெரிந்து சிலரும், தெரியாமலே பலரும் உயிரையே கூட அர்ப்பணித்தார்கள்.

என்றாலும், இந்த லாப நட்டக் கணக்கைப் போட்டுப் பார்க்காமலே உழைத்தது திராவிட இயக்கம். முடியுமா, முடியாதா என்பதை விட, வேண்டுமா, இல்லையா என்ற கேள்விக்கே முதலிடம் தந்து, வெற்றி தோல்வி பற்றிக் கவலைப்படாமல் தன் அரும்பணியிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்து செயல்பட்டது திராவிட இயக்கம்.

இயக்கத்தின் எண்ணங்கள் அர்த்தமற்றவையாகப் போய் விடவில்லை. நடக்கமுடியாத கற்பனைகளாக, பகற்கனவாகப் போய்விடவில்லை. முழுவதுமாக இல்லாவிட்டாலும் குறிப்பிடத்தக்க அளவு அதன் குறிக்கோள் வெற்றிமுனை நோக்கி நடைபோடத்தான் செய்தது.

தமிழகத்தின் இந்த விழிப்புணர்ச்சிக்கு வித்திட்ட திராவிட இயக்கத்தின் பணியை, நல்ல இதயம் படைத்த எவரும் மறுக்கத் துணியமாட்டார்கள். நிற்க, நாட்டில் ஏற்பட்ட இந்தச் சாதகமான சூழ்நிலையில்தான், அந்த இரண்டு கட்சிகளும் பிறந்தன. இரண்டும் தமிழர்களின் பெயரால் இயங்கத் தொடங்கின— அதாவது தமிழரின் பெயரால் இயங்கினால் மட்டுமே இனி இங்கு மக்கள் ஆதரவைப் பெற முடியும் என்பதைத் தெரிந்து கொண்டு இயங்கின.

தமிழரின் பெயரால் இயங்கும் ஒரே காராணத்தால் இந்தக் கட்சிகள் பற்றிப் பிறரும் பேசத் தலைப்பட்டனர். பின்பற்றுவோர் இருந்தாலும், இல்லாவிட்டாலும் நிச்சயமாக இவை பற்றிப் பேசுவோர் இருக்கத்தான் செய்தார்கள். அதற்கான முக்கியமான காரணம் அவை தமிழரின் பெயரால் இயங்குவதேயாகும்.

சுருக்கமாக உண்மையைச் சொல்லப் போனால், இந்த இரண்டு கட்சிகளும் திராவிட இயக்கம் மூட்டிய மொழி, இன, நாட்டுச் சுதந்திர உணர்ச்சி நெருப்பில் 'குளிர் காய்'கின்றன.

★ ப. புகழேந்தி ★

இவற்றில் ஒரு கட்சி தோன்றி சுமார் பத்து ஆண்டு ஆகிறது. மற்றொன்று உருவெடுத்து முழுமையாகப் பத்து மாதங்கள்கூட நிரம்பவில்லை.

இரண்டும் ஒரே பகுதி மக்களுக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்கின்றன.

நாட்டுமக்களிடம் தங்களை அப்பழுக்கற்ற தமிழுணர்ச்சியுள்ளவர்களாக அறிமுகப்படுத்திக் கொண்டுள்ள அந்த இரண்டு கட்சிகளும், தங்களை மட்டும் சொல்லிக்கொள்ளாமல் - தங்களோடு இரண்டு சரித்திர நாயகர்களையும் இழுத்துக்கொண்டு வலம்வரத் தொடங்கியிருக்கின்றன.

அந்தச் சரித்திர நாயகர்களை வெறுமனே காட்டுவதோடு மட்டுமல்லாமல், ஒரு சாராரின் கதாநாயகனை மற்றொரு சாரார் குறை கூறிக்கொண்டும் திரிகிறார்கள்.

அவர்களின் கையில் அகப்பட்டு வதைபடும் பரிதாபத்திற்குரிய அந்தச் சரித்திர நாயகர்கள் **கட்டபொம்மனும், புலித்தேவனும்** ஆவார்கள்.

அவர்களின் பெயர்களைப் பிரஸ்தாபித்து 'கோதா'வில் இறங்கி இருக்கும் அந்த இரண்டு கட்சிகளின் பெயர்கள்:

1. **தமிழரசுக் கழகம்.**
2. **நாம் தமிழர் இயக்கம்.**

—தொடரும்—

அழியாச் சொத்து

கிளிஞ்சுக்குள் முத்துக்கள் வைத்துக் கிலுகிலுப்பை ஆட்டும் மதுரை மூதூர்! தேரோடும் வீதிகள்! தெருவெல்லாம் மாடங்கள்! கற்கோயில் கண்ட தமிழர்களின் கலைக்கோயில்! பிரம்மாண்டமான அரண்மனை! கோட்டைச்சுவர்! நான் மாடக் கூடலிலே கலைவளம் காணுகிருன் கலைஞன். "கங்கை அம்பெருயாறு கடல் படர்ந் தாங்கு அளந்து கடை அறியா மதுரை"யின் செல்வச் செழிப்பைப் பாடுகிருன் கவிஞன்.

ஒருநாள். பொழுது சாயும் நேரம். நாளங்காடிக்குப் போவோர், வருவோரின் ஓசையும், வீதிகளில் விளையாடும் சிறுவர்களின் ஆரவாரமும், பண்டங்கள் விற்போரின் விளிகளும், கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து கொண்டிருந்தன.

மேற்குத் தெருவிலுள்ள பொற்கொல்லன் ஒருவனின், பட்டறையிலிருந்து வெளியே வந்தாள் வயது முதிர்ந்த பெருமூதாட்டி ஒருத்தி. தும்பைப்பூவைப்போல் வெளுத்த தலையும், சுருக்கங்கள் விழுந்த முகமும், திரையோடிப் போன உடலும், ஒரு நூறு வருடத்தைக் கழித்து விட்ட பெண்ணரசி என்பதை நினைப்பூட்டின. அவள் கோலூன்றிக் கூனிக் குறுகி கோட்டை வாசலை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினுள்.

அடிக்கொருதரம், வாய் திறக்காமல் சிரித்துக்கொண்டாள். புகழ் பெற்ற பெரும்புலவன் மருதவாணனை ஈன்றவள் என்ற இறுமாப்போ? அல்லது, தான் பாட்டியாகிவிட்டதால் ஏற்பட்டப் பூரிப்போ? - யார் கண்டார்கள்.

அவளது, நெஞ்ச ஏட்டில் கடந்த கால நிகழ்ச்சிகள் எனும், பழைய அத்தியாயம் திருப்பப்படுகிறது.

★

மருதவாணன், உறையூர்க் கவிஞர் பெருநாகனுரின், மகளை மணந்தான். மணமக்கள் இருவரும், கட்டிலறைக் காவியம் பல கற்ருர்கள். அவனுக்கு அவள், காதலெனும் நெஞ்சத்துத்-தேன் ஊற்று - வாழ்க்கை மலர்க் காட்டில் உலவுகின்ற மான் - அமுத மழை. அவளுக்கும் அவ்வாறே அவனிடத்தில் மிக்க அன்பு.

ஓராறு மாதங்கள் உருண்டோட, உடல் உருமாற, வயறு முன்புறம் தள்ள, மாது அவள் தாய்மை எனும் பெரும்பேற்றின் முதல் படியை அடைந்திட்டாள். கிழவி நெஞ்சம் பூரித்தாள். புலவன், "ஆரணங்கே! பெண் மயிலே! மகன் பிறந்தால், நீ என்னை மறந்திடுவாய்!..." என்று பல கூறி உள்ளம் மகிழ்ந்திட்டான்.

உறையூரிலிருந்து, பெருநாகனுர் வந்தார்-பிள்ளைப்பேற்றிற்காக மகளை அழைத்துச் செல்ல! கிழவி கண்ணீர் வடித்தாள். மருதன் பிரிவு எனும் பெருந்துன்பம் வந்ததே என வருந்தினுன்.

அடுத்த இதழில்

தமிழ் வாழ்வு

எனும் தலைப்பில்

அரங்கேறிய

முடியரசன்

கவிதை வரும்.

"அத்தை! போய் வரட்டுமா...?" கிழவியின் காலில் விழுந்து வணங்கினுள். புலவனின் மனைவி.

"எழுந்திரு'மா! ஒரு குறைவும் வராது! எனக்கு தங்கச் சிலைப்போல ஒரு பேரனை மாத்திரம் பெத்துக் கொடுத்திடணும்..."

புலவன் கடைக்கண்ணுல், தன் மனைவியைப் பார்த்தான். அவள் கன்னங்கள் நாணத்தால்ச் சிவப்பேறியது.

"பேரனெப் பெத்துக் கொடுக்கிறேன்! எனக்கு என்ன கொடுப்பீங்க? பொற்சிலம்பு செய்து பூட்டுவீங்களா?..."

அவளது நெடுநாள் ஆசை வெளிப்பட்டது. வாயும், வயிறுமாக இருப்பவரின் ஆசையைப் புறக்கணிக்கலாமா?

"எல்லாம், செய்து பூட்டுறேன்'மா! மகராசியா போயிட்டு வா..." கிழவி வாழ்த்தினுள். புலவன் தனக்குள்ளே சிரித்துக்கொண்டான்.

நாலைந்து திங்கள் கழிந்தன. கிழவிக்குப் பேரன் பிறந்தான் என்ற செய்தி உறையூரிலிருந்து வந்தது; மகன் முகங் காண, புலவன் பறந்தான்-உறையூர் நோக்கி.

★

கிழவி தன் மடியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டாள்.

அவள் கோட்டை வாசலை அடைவதற்குள் நன்ருக இருட்டிவிட்டது. அந்தக் கண்ணுக்குக் கண் தெரியாத மையிருட்டில், கிழக்கே செல்லும் பாதை வழியாக தன்னந் தனியே செல்ல அவளுக்கு எவ்வளவு நெஞ்சத் துணிவு வேண்டும்! வெண்கொற்றக் குடையின் கீழ் செங்கோல் நடத்தும் பாண்டியன் ஆட்சியில் கள்வர் பயமே இல்லையா?

கூப்பிடு தூரம் சென்றதும், காலையிலிருந்து தெற்கே பிரிந்து செல்லும் ஒற்றையடிப் பாதையொன்றைப் பார்க்கலாம். இருமருங்கும் உயர்ந்த மரங்களும், குத்துச் செடிகளும், மண்டிக் கிடக்கின்றன. வளைந்து வளைந்து செல்லும் அந்தப் பாதை மூங்கிலால் வேலியிடப்பட்ட ஒரு பூஞ்சோலையின் வாசலில் போய் முடிகிறது. அம்மம்மா! எவ்வளவு மலர்கள்! அவைகள் தரும் மணம் மூக்கைத் துளைக்கிறது. பூஞ்சோலையைத் தொட்டுச் செல்லும் வைகையாற்றின் அலைகளிலே மிதந்துவரும் இளந்தென்றல் காற்றில் மெய் மறந்து நின்றுவிடுவோமாஞல், கிழவி ஒற்றையடிப் பாதையைக் கடந்து, பூஞ்சோலையின் நடுவில் அமைந்திருக்கும் குடிசைக்குள் நுழைந்ததைக்கூடக் காணமுடியாது!

★

மதுரையிலே புலவர்கள் மாங்காட்டுக் குயில்களைப்போல் நிறைந்திருந்தார்கள். அரசவையில் பாடிப் பரிசில் பெற்றுப் போவோரும், அவர்கள் வழியிலே ஆற்றுப்படுத்தும் பாணர்கள், விறலிகளின் தொகைக் கணக்கிலடங்காது. அரசவைப் புலவர்கள் என்ற பெருமையைப் பெற்றவர்களே நூற்றிற்குமேல் இருந்தார்கள்.

அரசன் அவையில் நுழைந்ததும் பேர் பாடுவான் ஒருவன்; கொடி பாடுவான் மற்ருெருவன்; கலிவெண்பாவால் தேர் பாடுவான் வேருெருவன். தமிழகத்தில் எதற்குக் குறை வந்தாலும், புலமைக்கு மாத்திரம் குறைவு வராதோ என்னவோ?...

மருதவாணன் பெரும் புலவன். கற்பனை நயத்தோடு கவிதை இயற்றுவதில் அவனுக்கு நிகர் அவனே தான். கவிதைத் தேனூறும் செந்தமிழ்ச் சொற்களை அவன் அமைக்கும் விதமே அலாதி. கோவலர் வாய் வைத்தக் குழல் கேட்டு அசைபோட மறந்து நிற்கும் பசுக் கூட்டம் போல, மெய் மறந்து வீற்றிருப்பார்கள்-அரசவைப் புலவர்கள். அவன் பட்டி மண்டபம் ஏறி வாதாடுகிருன் என்ருல் மற்ற புலவர்களுக்கு கைகால் ஆட்டந்தான்; எங்கே நம்மைச் சந்தியில் இழுத்துவிடுவாஞே என்ற பயம்...

மன்னனுக்கு மருதவாணன் என்ருல் கொஞ்சம் மதிப்பு உண்டு. முந்தாநாள் அவன் அரசவையில் பாடிய அந்தாதி கேட்டுப் பாண்டியன் ஆயிரம் பொன் பரிசளித்தான். அதைக் கொண்டு, தன் மனைவிக்கு இரண்டு பொற்சிலம்பு வாங்கித் தரவேண்டும், என்று புலவன் எண்ணியதில் தவறென்ன இருக்கமுடியும்.

★

நள்ளிரவு.

ஆள் அரவம் கேட்டுக் கிழவி திடுக்கிட்டு கண்விழித்தாள். போர்வையை விலக்கிவிட்டு எழுந்திருந்தாள். அவள் கைகள் தாஞகத்-தரையைத் தடவின. ஏதோ ஒருவித ஆறுதல். ஆம்; கைத்தடி கைக்குத் தட்டுப்படுகிறது. கோலூன்றி மெல்ல எழுந்தாள். கூனிக்கூனி விளக்குத்தண்டிற்குப் பக்கத்தில் சென்று தீபச் சுடரை ஆள்காட்டி விரல் நுனியால் பெரிது செய்துவிட்டு சுற்று முற்றும் பார்த்தாள்.

கைத்தடி அவள் பிடியிலிருந்து நழுவி கீழே விழுந்தது.

தீப ஒளியில் கத்திகளைத் தாங்கிய நாலைந்து கரங்கள் தென்பட்டன. கிழவிக்கு வியர்த்துக் கொட்டியது.

கரிய உருவம், ஒன்று இருளிலிருந்து வெளியே வந்தது.

"ஏ! கெழவி! ஏதாவது பணம், கிணம், வெச்சுருக்கியா..."

கிழவி தைரியத்தை வரவழைத்துக் கொண்டு தட்டுத்தடுமாறிப் பேசத் தொடங்கினுள்.

"நாங்க ஏழைங்க! எங்கிட்டெ ஏதுப்பா பணம்? தினம் வயித்தெக் கழுவுதுக்கே நாலு வெண்பாப் பாட வேண்டியிருக்கு..."

பின்புறமிருந்து மற்ருெரு உருவம் வெளியே வந்தது.

"ஏதாவது வெச்சிருப்பே! மரிவாதையாக்-கொடுத்திடு!..."

கிழவிக்கு உடம்பு சில்லிட்டது. தரையோடு தரையாக அப்படியே சிலையாகிவிட்டாள்.

"அவளெக் கேக்கறது என்னு இருக்கு. அந்தப் பெட்டியைத் திறந்து பாரடா..." என்று கூறிக் கொண்டே இன்ஞெருவன் விளக்குத் தண்டின் பக்கத்தில் வந்து நின்ருன்.

கிழவிக்கு எங்கிருந்து இவ்வளவு தைரியம் வந்ததோ தெரியாது! ஒருவேளை, தான் ஒருபுலவனை ஈன்று புறந்தந்தவள் என்ருல் திருடர்கள் போய்விடுவார்கள் என்ற நம்பிக்கையோ என்னவோ?

"சத்தியமாச் சொல்றேன்'பா... எங்கிட்டெக் காக்காசுகூட இல்லை. என் மகன் உறையூருக்குப் போயிருக்கிருன். வந்ததும் உங்கள் மேல் வேணுமாஞ ஒரு பாட்டுப் பாடச் சொல்றேன்..."

மூவரும் பலமாகச் சிரித்தார்கள். கிழவியின் பேச்சை அவர்கள் காது கொடுத்துக் கேட்டதாகவேத் தெரியவில்லை. விளக்குத்தண்டைக் கையிலெடுத்துக்கொண்டு மூலையில் இருக்கும் சிறிய பெட்டியை நோக்கி நடந்தார்கள் மூவரும். "பாட்டு பாடச் சொல்லுவாளாமே. இங்கெ வயுறு காயுது..." என்ற வார்த்தைகள் மாத்திரம் அவள் காதுகளில் லேசாக விழுந்தன.

ஒருவன் பெட்டியைத் திறந்தான். மற்றவன் விளக்குத்தண்டை முன்னுக்கு நீட்டிஞன்.

விளக்கு வெளிச்சத்தில்-பெட்டிக்குள் ஓலைச் சுவடிகள் குவிந்து கிடந்தன. திருடர்களுக்கு ஒரே ஏமாற்றம். அவர்கள் கோபம் எல்லாம் ஓலைச்சுவடியின் மேல் சென்றது.

"சுவடி எல்லாத்தையும் எடுத்து வெளியே போட்டுக் கொளுத்துங்கடா..." என்று கூறிக்கொண்டே பெட்டிக்குள் இருந்த சுவடிகள் எல்லாவற்றையும் வெளியே தூக்கி இறைந்தான் ஒருவன்.

பேச்சு மூச்சற்ற நிலையில் கல்லாய் சமைந்து நின்ற கிழவியின் செவியில் ஈயத்தைக் காய்ச்சிப் பாய்ச்சுவது போல இந்த வார்த்தைகள் விழுந்தன.

கிழவி நிமிர்ந்தாள். விழிகளிலே வீரத்தைத் தேக்கினுள்- தளர்ந்த நரம்புகளிலே ஒருவித புது சக்தி பிறந்தது. ஒரே பாய்ச்சலில் பாய்ந்து அவர்களின் நடுவில் சென்ருள்.

"என்ன காரியம் செய்யப்போறீங்க?...ஓலைச்சுவடியைக் கொளுத்தப் போறீங்களா? வெறும் பனை ஓலையில்லப்பா இவைகள் - அவ்வளவும் ரத்தினம் - அழகு கலையாத காவியம் - என் மகன் கற்பனைக் கடலிலே மூழ்கி எடுத்த முத்துக்களப்பா..." கிழவி ஏதோ அடுக்கிக் கொண்டே போனுள்.

— அடுத்த பக்கம் —

அறிவு

உயிரினங்களின் வளர்ச்சியில் மனிதனுக்குள்ள சிறப்பு, அவன் பகுத்துணரும் சக்தி பெற்றிருப்பதே. இதர உயிரினங்களெல்லாம் இயற்கைத் தூண்டுதலால் மட்டுமே செயல்பட, மனிதன் மட்டும் தனது அறிவால் பகுத்துணர்ந்து, நன்மை தீமை கண்டு காரியமாற்றுகிறான். இச்சிறப்பே படைப்பின் சிகரமாக அவனை வீற்றிருக்கச் செய்கிறது. இவ்வாறு நன்மை தீமைகளை ஓர்ந்து உணர்வதில் ஒருவன் பெற்றிருக்கும் ஆற்றலின் உணர்வை ஒட்டியே அறிவுடைப் பெருமக்களால் மதிக்கப்படுகிறான்.

உண்மைகளைத் தன் நிலையிலே நின்று உணர்ந்தவர் திருவள்ளுவர். ஆகவேதான் அவர் எடுத்துக் கூறும் உண்மைகள் மனிதக் குறைபாடுகளால் மாசுபடுத்தப்படாமல், தெளிந்த நீதிகளாக விளங்குகின்றன. இப்படி அவர் கூறிடும் நீதிகள் வெறும் லட்சியநீதிகளாக மட்டும் இருந்துவிடுமானால், பெரும் மகான்கள் மட்டுமே அவற்றை வழிகாட்டிகளாகக் கொள்ளமுடியுமே தவிர, சராசரி மனிதர்கள் ஏற்றுக்கொள்ளமுடியாது. வள்ளுவரின் நோக்கமெல்லாம், ஓரிரு தனி மனிதர்களை மகான்கள் ஆக்குவதல்ல. லௌகீகச் சூழலில் அல்லல்பட்டுத் துயருறும் மனிதனிடத்தில் காணப்படும் குறைபாடுகளைப் போக்கி, அவனைச் செம்மைப்படுத்துவதாகும். அதனால்தான் வள்ளுவர் லட்சிய உண்மைகளை நடைமுறைக்கு ஏற்ற முறையில் பக்குவப்படுத்திச் சொன்னார். இதர நீதி போதகர்கள் வெறும் கற்பனையுலக சஞ்சாரிகளாகவும் (Visionary) லட்சியவாதிகளாகவும் (Idealists) இருக்க, வள்ளுவர் ஒரு பிரத்தியட்சவாதியாக (Realist) இருப்பதைப் பார்க்கிறோம். ஓரிரு மகான்கள் ஒரு சமுதாயத்தில் தோன்றினால்மட்டும் அந்தச் சமுதாயம் உயர்ந்துவிடாது. சமுதாயத்தில் வாழும் சாதாரண மனிதனின் வாழ்க்கை விழுமியதாக இருக்க வேண்டும். சில பேரறிஞர்களைப் பல நூற்றாண்டுகளுக்குமுன் தோற்றுவித்த கிரேக்கம், வரலாற்றில் இடம் பெற முடிந்ததே தவிர, தன்னை ஒரு சிறந்த சமுதாயமாக அது உருவாக்கிக்கொள்ளவில்லை. ஆனால் வேறெந்த நாட்டையும்விட பிரிட்டனில் தோன்றிய மகான்களின் எண்ணிக்கை குறைவு. தனி மனிதன் அங்கே பொறுப்புள்ளவனாக இருப்பதால், பிரிட்டிஷ் சமுதாயம் ஒரு உயர்ந்த சமுதாயமாக உருப்பெற முடிந்தது. சராசரி மனிதனின் உயர்வே சமுதாய உயர்வு எனத் தன் நுண்ணறிவால் உணர்ந்த காரணத்தாலேயே வள்ளுவர் லட்சியங்களை வகுக்கும்பொழுதும், சராசரி மனிதனை முன் நிறுத்தியே லட்சியங்களை வகுத்தார்.

தனி மனிதனுக்கும் (Individual) சமுதாயத்துக்கும் (Society) உள்ள தொடர்பை எல்லாத் துறைகளிலும் வள்ளுவர் வரையறுத்ததுபோல், வேறு எந்த நீதி போதகரும் வரையறுத்துச் சொல்லவில்லையென்று துணிந்து கூறலாம். தனி மனிதன், சமூகம், மறு உலகம் ஆகிய மூன்றையும் இணைத்தே இதர நீதி நூல்கள் பேசின. ஆனால் குறள்மட்டுமே முதலிரண்டோடு தனது போதனையை நிறுத்திக் கொண்டது. மறு உலகம் அல்லது மோட்சத்தை அது ஒரு மதிப்பீட்டுக் கருவி (EvaluatingFactor) யாக ஏற்றுக்கொள்ளவில்லை. அனுமானப் பிரச்சினைகளில் (Speculative Problems) வள்ளுவர் ஈடுபட முயலவில்லை.

அறிவுக்கு எத்தனையோ சிந்தனையாளர்கள் எத்தனையோ விதமாக இலக்கணம் கூற முற்பட்டனர். அறியப்படுவது அறிவு. ஆங்கிலத்திலும் ‘Know’ என்ற வினைச் சொல்லின் அடிப்படையிலேயே ‘Knowledge’ என்ற பெயர்ச் சொல்லும் பிறந்தது. அறிவது என்றால் என்ன? எதை அறிவது? எப்படி அறிவது? மிருகங்கள் இயற்கையுணர்வால் (Instincts) அறிவதற்கும், மனிதர்கள் பகுத்துணரும் அறிவால் (Reasoning Faculty) அறிவதற்கும் வேறுபாடு வேண்டாமா?

மிருகங்கள் அனுபவத்தால் ஒதுக்கப் பழகிக்கொள்ளுகின்றனவே (Eliminate) தவிர, தேர்ந்தெடுக்கத் (Select) தெரிந்து கொள்ளுவதில்லை. நெருப்பு ஒரு முறை சுட்டால் மறு முறை மிருகங்கள் அதைத் தீண்டாது. நெருப்பை அனுபவத்தால் ஏற்பட்ட பயத்தினால் ஒதுக்கிவிடுகின்றன. அதற்குமேல் நெருப்பைப்பற்றி அவை சிந்திப்பதில்லை. ஆனால் மனிதன் நெருப்பின் குணமறிந்து அதை ஒதுக்கிவிடுவதில்லை. அக்குணத்தின் இயல்பினை நன்கு தேர்ந்து தனக்கு உபயோகமான காரியங்களில்-நன்மையான காரியங்களில்- பயன்படுத்திக்கொள்ளுகிறான். இப்பகுத்துணரும் திறம் தான் மனிதனைப் பிற விலங்கினத்திலிருந்து விலக்கி உயர்ந்தவனாகக் காட்டுகிறது.

ஆகவே தீமையை அறிவதும், அதன்பின் அதை ஒதுக்குவதும் அறிவின் முதல் வேலை. அவ்வளவோடு மனித அறிவு நின்றுவிடுமானால் அதற்குச் சிறப்பில்லை. தீமையை விலக்கியபின் நன்மையிருக்குமிடம் அறிந்து அதன்பால் செல்லுவதும் அறிவின் தன்மையாகும்; அதாவது, மனித அறிவின் தன்மையாகும்! ஆகவேதான் அறிவை வரையறுக்கும் வள்ளுவர்

சென்ற இடத்தால்
செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்ப தறிவு

என அதற்கு வரம்பு கட்டினார். அறியப்படுவது அறிவாதலின் ஐம்புலன்களின் வழியாக மட்டிலுமேதான் அதைப் பெறமுடியும். எனவேதான் உள நூலாரும் (Psychologist) ஐம்புலன்களையும் அறிவின் நுழைவாயில் என்றனர். (The five senses are the gateways of knowledge) இப்புலன்களை தீமையின்பால் செல்லாமல் தடுத்து, நன்மையின்பால் செலுத்துவதே அறிவின் வேலை. தீமையின்பால் செல்லாமல் நன்மையின்பால் அவை செல்லுவதால் ஏற்படும் விளைவே அறிவு என்பது வள்ளுவரின் வாக்கு.

ஒழுக்கவுணர்வு சூட்சமமாக நின்று அறிவை இயக்க வேண்டிய அவசியத்தை உணர்த்த நினைந்த வள்ளுவர், ஒழுக்கத்தை அறிவினின்று பிரித்துக் காட்டாமல், ஐம்புல உணர்வு ஒழுக்கத்தோடு ஒன்றி இயங்கும்போதே அறிவு என்ற தகுதி பெறுகிறதென்று கூறி, ஒழுக்கத்தை அறிவின் உயிர் நிலையாக்கினார். அறிவற்ற ஒழுக்கமே மூடநம்பிக்கை; ஒழுக்கமற்ற அறிவே அழிவின் வித்து! எனவே ஐம்புலன்களும் அனுபவத்தைப் பெறும்போது, அவ்வனுபவம் தீமை நீங்கிய நன்மையாயிருக்குமானால் பிறப்பது அறிவாக இருக்கும். மற்றெல்லாம் அறிவாகா என்பது வள்ளுவரின் கருத்து. இவ்வுண்மையைப் பரிமேலழகரும் ‘குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல, வேறாக்கி மனத்தைப் புலமறிந்து செலுத்துவது ‘அறி’வென்றார். அஃது உயிர்க்குணமாகலின், என்று மிகப் பொருத்தமான உதாரணத்தோடு விளக்கினார்.

தீமையை விலக்கி நன்றின்பால் அறிவைச் செலுத்தாமையால் உலகம் அடைந்துள்ள துயரமும் துன்பமும் அளவிறந்தன. மனிதனின் அறிவாற்றலால் கண்டுபிடிக்கப்பட்ட அணுசக்தியை, மனிதன் நன்றின்பால் மட்டும் உய்ப்பதாயிருந்தால் அணுகுண்டு தோன்றியிருக்காது; ஆக்க வேலைகளுக்குப் பயன்பட்டிருக்கும். தீமையின்பால் செல்லுவது அறிவல்ல என்ற குறள் நெறிப்படி, இன்று பலருடைய அறிவு அறிவாக இருந்து பலனளிக்கவில்லை. மனித இனத்தின் எதிர்காலமே மனித இனத்தில் தோன்றிடும் அறவுணர்வைப் பொறுத்துத் தான் இருக்கிறது. இந்த அறவுணர்வு தோன்ற வேண்டுமானால், தீமையை ஒழித்து அறிவு நன்மையிடமே செலுத்தப்படல் வேண்டும்.

சென்ற இடத்தில் செல்லவிடாமல், தீமையானதிலிருந்து நீக்கிக் காத்து நன்மையானதில் செல்லவிடுவதே அறிவாகும்.

இது வள்ளுவரின் தீர்க்கதரிசன வாசகம். இன்றைய உலகம் உடனடியாகக் கவனிக்க வேண்டிய விஷயம். பெரிய ஞானிகள் எளிய வாக்கியங்களில் அழியாத உண்மைகளைக் கூறிவிடுகிறார்கள். அவற்றைக் கடைப்பிடித்து வாழும் எண்ணம்மட்டும் நமக்கிருந்தால்.....? இந்த உலகம் இன்ப பூமியாக மாறிவிடும்—எல்லோருக்கும்!

-பி. சி. கணேசன்,
பி. எஸ்சி., பி. டி.

★ ★ ★

— முன் பக்கத் தொடர்ச்சி —

“அந்தக் கிழவியை அப்புறம் புடிச்சுத் தள்ளுங்கடா!...” ஒருவன் உறக்கக்-கத்தினான்.

“நான் கொளுத்த விடமாட்டேன்! நான் கொளுத்த விடமாட்டேன்! என் பேரப்பிள்ளைகளுக்கு என் மகன் மிச்சம் வைத்திருக்கும் சொத்து இது ஒண்ணுதான். இதைச் சாம்பலாக்க விடமாட்டேன்!...” கிழவி உணர்ச்சிப் பெருக்கில் பேசினாள்.

“அப்பப் பணம் கொடுக்கிறியா? இதைக் கொளுத்தலே...” வேறொரு கண்டிப்பான குரல்.

கிழவி என்ன நினைத்தாளோ? விறு விறுவென்று அரங்கிற்குள் சென்றாள். அடுக்கிவைத்திருக்கும் பானைகளில் ஒன்றை எடுத்துவிட்டு, கையை உள்ளே விட்டாள். அவளது கைகளில் இரண்டு பொற்சிலம்பு ஒளி வீசியது.

மாணிக்கப்பரல் நிறைந்த பொற்சிலம்பு! ஆயிரம் பொன் போட்டுச் செய்தது! தன் மருமகளுக்குப் பூட்டி மகிழ, நேற்றுத்தான் வாங்கி வந்தாள்.

கிழவி திருடர்களிடம் திரும்பி வந்தாள்.

“இந்தாப்பா! உங்களுக்குப் பணம்தானே வேணும்! இதை எடுத்துக்கிங்க! ஓலையை மாத்திரம் கொளுத்தாதீங்க! என் மகன் கற்பனையைப் பிழிந்து சம்பாதித்த “அழியாச் சொத்து இவைகள்...”

திருடர்களுக்கு ஒரே கொண்டாட்டம். மூவரும் வெளியேறினார்கள். விளக்குத்தண்டை வைத்திருந்தவன் மாத்திரம் அதைத் தூக்கி எறிந்து விட்டுப் போனான். குடிசைக்குள் இருள் சூழ்ந்தது. கிழவி பேசாமல் நின்றாள்.

“பொல்லாத கிழவி!...” என்று யாரோ ஒருவன் சொன்னது மட்டும் அவள் காதுகளில் விழுந்தது.

கிழவி ஒரு அடி எடுத்து வைத்தாள்.

“சடார்!...”

மரப்பெட்டி காலில் இடறியது! ஓலைச்சுவடிகளின் மீது குப்புற விழுந்தாள்! நெஞ்சில் பலமான அடி! சிறிது நேரம் பேச்சுமூச்சற்ற நிலை.

கண்களை மெதுவாகத் திறந்தாள்—இரண்டு துளிக் கண்ணீர்.

“என் பேரன் வந்தால் இந்த ஓலைச் சுவடிகளை...” வார்த்தைகள் தடைப்பட்டன.

அவள் என்ன சொல்ல நினைத்தாளோ தெரியாது. அதற்குள் அவள் உயிர் உடலைவிட்டுப் பிரிந்து விட்டது.

-என். சிவம், பி. எஸ்சி.

— 2ம் பக்கத் தொடர்ச்சி —

தினம். அன்றிலிருந்துதான் நான் 'ஞானி'யானேன்.

சிரிப்பு!

"என்ன சிரிக்கிறுய்?"

"உன் ஞானத்தை நினைத்துக் கொண்டேன்."

"புனிதை! கேலியிருக்கட்டும். நதிக்கரையில் தாழம்புதர்களிடையே உனது அந்தச் சின்ன வீடு, எனக்கு நினைவின் மையமாயிற்று. எல்லாவற்றையும் மறந்தேன்."

"எப்பொழுதும் அருகிலிருக்கும் தம்பி வசுவையும் மறந்தாய் என்று சேர்த்துக்கொள்!"

"எதுவாக இருந்தால் என்ன? அந்தத் தாழைப்புதர்களிடையே, கால் படாது குழைந்த சகதியில் புற்று வளர்ந்தது. சிதல்களின் புற்று. சிறுகச் சிறுக வளர்ந்த அதன் வளர்ச்சி..."

"விளங்கும்படியாகச் சொல். புற்று, என்ன?"

"விளங்க வேண்டாம். நான் உனக்காகச் சொல்லவில்லை. மனம் உணர்ந்தால் போதும். புதர்களிடையே புற்று! அது முக்கியம்! பாசிபடர்ந்த கோபுரம்போல புற்று! தாழை குலை விரித்து சிரித்தது. நதிக்கரையில் மணம். ஆற்றின்நீர் மணமாக ஒழுகியது. தினமும். கரையில் மணிக்கணக்கில் காத்திருக்கும் மற்றவர்களையும் மறந்து, உனக்காக நீரைக் கிழித்து துழையும்போதெல்லாம் அந்த மணம், நெஞ்சில் போதையின் நுரை குழைத்தது. உன்னிடம் பெயர் கேட்டேன். நீ வசுவிடம் பேசிக் கொண்டிருந்தாலும், பார்வையை மட்டும் ஏன் என்னிடமே வைத்தாய்? அது வெறிச்சிட்ட பாழ்வெளிப் பார்வையா? அன்று எனக்குத் தெரியாது. தெரிந்திருந்தால்..."

"தெரிந்திருந்தால்?"

"நீ இன்று புனிதையாக இருந்திருக்கலாம்."

"புனிதமா?"

"ஆமாம்."

"சரி, கதை?"

"ஒரு நாள், தாழைப் புதரிடையே சிதல்புற்றில், அரவம் குடியேறியது. ஆற்றின் மணவெளியில், ஓலைக்குடிசைக்கப்பால் நான் உணர்ந்தேன். ஆமாம். புற்றிலிருந்த பாம்பின் மூச்சை நான் உணர்ந்தேன். மெல்ல, மெதுவாக. உலையில் குமிழி கிளம்புவது போல, ஒன்ருக, இரண்டாக, மூன்ருக, எண்ணில் அடங்காதவைகளாக, மூச்சுக்களை நான் அறிந்தேன். இதோ இந்தச் சிறைக்கம்பிகளிடையே; அனுமதிக்குக் கெஞ்சாமல் கம்பீரமாக நுழைந்து திரும்பும் காற்றுப்போல, மூச்சு! என் இதயம் தகித்தது. நான் காதலால் வெந்தேன். எனக்கு வெட்கமில்லை. நான் சொல்கிறேன். உன் காதலால் நான் வெந்தேன். புற்று எதை அறிந்தது? நாகம், உடலை வளைத்து வளைத்து அடங்கி நெளிந்தது."

"அந்த அடக்கம் எனக்குப் பிடிக்கவில்லை வசு..."

"வசு அடக்கம் தெரியாதவன். அதனுல் நீ...நான் அன்று அதை அறியவில்லை. தாழையின் மணமும், ஆற்றின் தெளிந்த நீரும், உன் பார்வையும், எனக்குப் பொய்யான ஒன்றைப் பற்றி எண்ண இடமளிக்கவில்லை."

"பார்வையால் ஏமாற்றினேன் என்கிறுயா?"

"அப்படியுந்தான்."

"பொய்!"

"எல்லாம் 'பொய்' என்பதை கடைசியில்தானே அறிந்தேன்."

"எப்படி?"

"ஒருநாள், பிரயாணத்தை முடித்து படகை தளைத்துவிட்டு வந்தபோது இருட்டிவிட்டது. அக்கரையின் ஓலைக்குடிசையை நினைத்தபோது சூனியமாக இருந்தது. உன் துணைக்கு, வழக்கம்போல் வசுவை அனுப்பாமல், நானே என்று முன் வந்தபோது உன் கண்ணில் நிறைந்த ஏமாற்றத்தை காதல் என்று எண்ணினேன். அன்று - உன்னை புதருக்கு அழைத்தபோது ஒரேயடியாக, 'வரவில்லை'யென்ற உன் பதிலை பெண்ணின் இயல்பு என்று எண்ணி அடங்கினேன். ஆனுல், தாழை பூத்த புதரினுள்ளே-புற்றில் நாகம் உறங்காமல் ஆடிற்று. வெகுகாலம்... வெகுகாலம்..."

"மௌனம்."

"என்ன நிறுத்திவிட்டாய்?"

"யோசிக்கிறேன். எல்லாம் நீயாகிவிட்ட பின்பு, நிலைகள் எப்படி வீக்கம் கொண்டன என்று யோசிக்கிறேன்."

"அப்படி நானென்ன பிரமாதமான மயக்கியா?"

"உம். நீ மயங்கி மயங்கிப் பேசுவதை விழியசைக்காமல் கேட்டேன்."

"உன்னிடமா பேசினேன்?"

"இல்லை. வசுதான் வாயாடியாயிற்றே; அவனிடம்."

ராஜாபார்லி
பிஸ்கட்ஸ்
• குழந்தைகளுக்குச் சிறந்த ஆகாரம்
PRO: A. சங்குபிள்ளை, 115, திண்டுக்கல் ரோடு, மதுரை.

"அவனிடம் நான் பேசியதில், நீ மயங்கி உன்னையே ஏமாற்றிக் கொண்டதில் நான் எப்படிப் பொறுப்பாவேன்?"

"நான் ஆண். சாவை, வாழ்வை, உண்மையை, பொய்யை, தாழையின் மலரை, புற்றை, நதியை, படகை, எல்லாவற்றைப் பற்றியும் சிந்திக்கும் ஞானியான எனக்கில்லாத நீ..."

"நல்ல வேடிக்கை, இவ்வளவு சிந்தித்து ஞானியான நீ, வசுவையும் என்னையும் பற்றி எண்ணவில்லை."

"புனிதை! துரோகி! அந்த நிலவின் நடு இரவில்—நான் வளர்த்த புதரில் — ஆற்றின் வெண்மணல் மெத்தையில் நான் என்ன கண்டேன்?" நான் பொறுப்பேனு? நீயும் வசுவும்... தீப்பற்றிக் கொண்டது. புற்றைக் கலைத்து விட்டேன். சிதல்கள், சுவைத்துச் சுவைத்து உருட்டிக் குவித்த புற்றுகளைச் சிதைத்தெறிந்தேன். சிறிய நாகங்கள்... இரட்டை நாக்கை நீட்டி நீட்டிப் பொங்கி வளைந்த நாகங்கள்... நான் பழிதீர்த்துக் கொண்டேன். வஞ்சம் எரிந்து அடங்கிற்று. புகை-புகை-புகைமட்டும்..."

—ஓவென்ற அழுகை!

"புனிதை!"

அழுகை சிறையின் இருளில் மறைந்தது! வெளியே காவலர்கள் தூங்கி வழிந்தனர். எங்கோ தொலைவில், வசந்தத்தின் காலைப் பறவை மெதுவாகப் பாடிற்று!

ஞானி இதயத்தில் அழுது கொண்டிருந்தான்!

வெளியே கோடை எரித்தது.

ஞானி, சிறையின் கற்றரையில் விழுந்து கிடந்தான். அருகில், சட்டியில் நேற்றிரவு வைத்த உணவில்; ஊர்ந்த எறும்புப் பட்டாளம் ஞானியின் திறந்த வாயினுள் பிரயாணம் செய்தது.

சிறையின் வெள்ளைச் சுவரில், நிழல் ஒட்டிக் கொண்டது போல, ஞானி சாய்ந்திருந்த வடு கறுப்பாகப் படிந்திருந்தது!

வெளியே கோடை எரித்தது!

—ஆ. மாதவன்

தனிப் பண்பாடு

சென்ற கிழமை அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு பத்திரிகை நிருபர் என்னைச் சந்தித்தார்; அவரிடத்தில் நான் பேசுகின்றபொழுது 'தமிழர்களுக்கென ஒரு தனிப் பண்பு உண்டு' என்பதைச் சொன்னேன். அதற்கு அவர், 'அந்தத் தனிப் பண்பு என்ன?' என்று கேட்டார். நான் எல்லாவற்றையும் விளக்க நேரமில்லாததால் ஒன்றே ஒன்றைமட்டும் எடுத்துக் காட்டினேன்.

'தமிழர்களுக்கு ஜாதியில்லை' என்று கூறினேன்; 'ஜாதி' என்பதிலுள்ள 'ஜா' என்னும் எழுத்தே தமிழுக்குச் சொந்தமானதல்ல என்பதைச் சொன்னேன்; 'அந்த ஒலி வடிவமே தமிழில் இல்லை; 'மதம்' என்பதும் தமிழ் அல்ல' என்பதையும் எடுத்துக் காட்டினேன்.

'தமிழ் நாட்டில் இப்பொழுது ஜாதியில்லையா?' என்ருல், இருக்கிறது; இராமசாமி முதலியார், இராசகோபால செட்டியார் என்று இப்பொழுது சொல்லப்படும் சாதிமுறைகள் அத்தனையும் நம்முடையவையல்ல!

இப்பொழுது நமக்குச் சொந்தமில்லாதவை யெல்லாம் நம்மிடமிருக்கின்றன; நமக்குச் சொந்தமானவையெல்லாம் நம்மிடமில்லை.

'தமிழனுக்கென்று ஒரு தனிப் பண்பாடு இருக்கின்றது.' தமிழ் இலக்கியங்களைப் படிக்கின்ற போதெல்லாம், அவற்றிலுள்ள ஒவ்வொரு கருத்தையும் யார் சொன்னுர்கள்—எதற்காகச் சொன்னுர்கள்-எப்பொழுது சொன்னுர்கள்-எதை விளக்குவதற்காக இதைச் சொன்னுர்கள்-என்பனவற்றை ஆராய்ந்தறிய வேண்டும். அப்பொழுதுதான், நம் நாட்டுப் பண்பு எது-வேற்று இனப்பண்பாடுகள் எவை எவை நம் நாட்டில் நுழைந்துள்ளன என்பதையறியலாம்.

தமிழ் இலக்கியத்திலே 'துறவி' என்கின்ற சொல்லை எடுத்துக் கொண்டால், துறவிக்கு இன்னதுதான் இலக்கணம் என்றல்லாமல் ஒவ்வொரு இலக்கியத்திலே ஒவ்வொரு விதமாக இருப்பதைக் காணலாம்.

மணிமேகலையிலே 'யாக்கை நிலையாமை'யைப் பற்றியும், துறவறத்தைப் பற்றியும் விளக்கப்பட்டிருக்கிறது.

பசித்தால் புசித்த துறவிகளும் இருந்திருக்கிருர்கள்; பசித்தாலும் இருக்கும் இடந்தேடி கொண்டுவந்து கொடுத்தால்தான் புசிப்பது என்றிருந்த பட்டினத்தார் போன்ற துறவிகளும் இருந்திருக்கிருர்கள். இன்னும் சிலர், கானகத்திலே வசித்து கந்தமூலத்தை புசித்ததாகவும் கூறப்படுகிறது.

பொதுவாக, துறவு மனப்பான்மை என்பது என்ன? துறவிக்கான இலட்சணங்கள் எவை என்பதை வரையறுத்துச் சொல்லாமல், பல்வேறு நூல்களிலும் பல்வேறு வகையாக இருப்பதைத் தமிழ் இலக்கியங்களிலே காண்கிருேம்.

—அறிஞர் அண்ணு.

வெண்பாப் போட்டி

29. எற்றேமற் றெற்றேமற் றெற்று.

'நெய்வேலி நீர்த்திட்டம்' என்பாரை நெஞ்சாரப்
பொய்சொல்லி மக்களிடைப் போவாரை—அய்யய்யோ
பெற்ருளே பெற்ருளே பாரதத்தாய் பெற்ருளே
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—வள்ளி, நாமக்கல்.

நற்றமிழைக் கல்லாரை நாவாற்றல் இல்லாரை
பெற்றதாய் நாடுமொழி பேணுரை—நற்றமிழர்
பெற்றனரே இங்கு பெருஞ்சோற்று மந்திரியாய்
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—முசுமன், கோவை.

தொண்டுசெய்து செந்தமிழ்த்தாய் துன்பொழித்த உத்தமரைக்
கொண்டாடி வாழ்தல் குணமாகும்—அன்னவரை
சற்றும் மதியாமற் சாடுகின்ற பாதகரை
எற்றேமற் றெற்றேமற் றெற்று

– கார்த்திகாதேவி, கமுதி.

அன்புத் தமிழிருக்க, ஆன்றேர்கள் நூலிருக்க,
இன்பக் குறளின் எழிலிருக்க—மன்பதையில்
முற்றத் துறந்தால்தான் முத்திவரும் என்பவரை
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—அமரன், தேனி.

நற்றமிழைக் கற்றிருந்தும் நாவலிமை பெற்றிருந்தும்
வெற்றுமொழி இந்தியினை வேண்டுவதோ?—பொற்கொடியே!
கற்புடையாள் பெற்றும் கணிகையினை நாடுகிருர்
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—எழிலூரான், சுந்தராபுரம்.

தன்நாடும் தன்மொழியும் தன்னினமும் அன்னியரால்
தன்முன்னே பாடழிதல் தானறிந்தும்—தன் னுதிரம்
சற்றேனும் சூடேருச் சண்டாளர்க் கேன்வாழ்வு
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—ந. ஜாபர், சித்தயன்கோட்டை.

பெண்ணுரிமை பேணுரை, பேசுமொழி போற்ருரை
விண்ணுலகப் பித்துடைய வேதியரை—கண்ணெனவே
போற்றும் உரிமைக்குப் போராட வாராரை
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—ச. கலைவாணி, திருபுவனைபாளையம்.

தெள்ளுதமிழ் என்பதுவோர் தேனூற்றே! திஞ்சுவையில்
உள்ளமதை யேகவாடிதோள் ஓரிதமோ!—பள்ளவயல்
முற்றியதோர் கோக்கரும்போ! முக்கனியின் சாறே!மற்(று)
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—இரா. அரங்கனுதன், நயனூர்மண்டபம்.

இத்தரையில் சான்றேர் இனிதமைத்த பல்தொழிலும்
வித்தைமகள் செய்கையென வீணுரைசெய்—எத்தர்பால்
கற்றேரும் ஏமாந்து கண்டார்போல் பூசித்தல்
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—மு. அ. முருகேசன், சென்னை-21.

வெற்றிகொள் பெற்றியறு வெற்றுமகன் உற்றதனுல்
பற்ருதோ பெற்றகுடல் முற்றுடலும்?—துற்றுக்கு
நிற்றலேன்? தெற்றமாய் அற்றுப்போ; குற்றமோ?
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—மு. முகம்மது அலி, காரைக்கால்.

கற்கண்டுத் தேமொழியே! காதல் மடமானே!
விற்புருவச் சொல்லமுத வேல்விழியே!—கற்பொடுநாம்
புற்றரையில் பேரின்பம் பெற்றிடுங்கால் பொற்கட்டில்
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—சு. கந்தசாமி, கருப்பட்டிபாளையம்.

தென்னாடு வேண்டாம் தமிழ்நாடே தாவென்று
முன்னாளுக் கின்னாள் முரண்பட்டாய்!—தன்கொள்கை
விற்ருய் "விடுதலை"யே! வெண்பொழுதில் உன்கொள்கை
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—ப. வே. இராமசாமி, முகவை.

தென்னகமும் பண்டைச் செழுந்தமிழும் ஓங்கு தற்கே
தொண்டுசெயும் உத்தமரைத் தாரணியில்—கண்டபடி
திட்டுகிற மூடரையும் சேர்ந்துழைக்காத் தியரையும்
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—குகன்குருசாமி, கமுதி.

கற்றேம் கலைபலவும் கல்லூரி ஏறிமிக
உற்றேம் பெருமறிவு ஒண்டமிழா!—கற்றதற்கு
தெற்றுத் தரும்வாழ்வை தேர்ந்துமே ஆய்ந்திட்டால்
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—இரா. வடிவேலன், பேரோடு.

தேனும் தினைமாவும் தித்திக்கும் மா,பலவும்
நாணுமே பைந்தமிழின் நற்சுவைக்கு;—மீன்தமிழைச்
சற்றும் மதியாமல் சாடவரும் இந்தியினை
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—தென்றல் ராமலிங்கம், சென்னை-6.

நாட்டுச் சமத்துவத்தை நன்கு மதிக்காமல்
வீட்டுக்குள் வைத்து விளைபயனைப்—பூட்டிவிட்டுப்
பெற்றேன் பொருளென்று பேரார்வம் கொள்பவனை
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—வித்துவான் சி. இரத்தினவேலனூர், சென்னை-19.

தென்றலே! கார்காலம் தேர்ஏறி வந்தடைவேன்
என்றுரைத்து விட்டகன்ற என்தலைவர்—இன்றுவரை
தெற்றென வந்தடைந் தென்பசலை போக்காத
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—பா. அங்கப்பன், புதுச்சேரி.

மக்கள் பிறப்பதுவும் மாநிலத்தில் செல்வமதைத்
தக்கபடி சேர்ப்பதுவும்; தாழ்வின்றி—மிக்கின்பம்
முற்றியநல் இல்லறத்தில் மூழ்குவதற் கன்றிமற்(று)
எற்றேமற் றெற்றேமற் றெற்று.

—வள்ளிகாந்தன், கரந்தை.

கட்டிக் கரும்பாம் கவின்தமிழால் நித்தநித்தம்
மட்டற்ற இன்புற்று வாழ்கின்றேம்—எட்டிநிகர்
வேற்றுமொழி மந்திஇந்தி விந்தியத்தைத் தாண்டிவரல்
எற்றேமற் றெற்றேமற் றெற்று?

—நா. மாணிக்கம், பென்னுகரம்.

★
எங்கும் கிடைக்கும்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு